தனிப்பிரதி 1 அணா வருட சந்தா ரூ. 5. REGD. No. M. 4455.

திராவிடநாடு

ஞாயிறு வெளியீடு.

ஆசிரியர் C. N. அண்ணாதுரை M. A.

"தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்!——இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!"
[கவி பாரதி தாசன்]

மலர் 1 || காஞ்சிபுரம் 12—4—42 விசு—பங்குனி 30உ ஞாயிறு || இதழ் 6

டாக்டர் எங்கே?

பரதன்.

டாக்டர் எங்கே? டென்னிஸ் ஆடுகிறார்!

டாக்டர் எங்கே? ஆஸ்பத்திரிக்குப் போயிருக்கிறார்.

இப்போது எங்கே டாக்டர்? தெரியாதமாதிரி கேட்கிறீரே. காலையிலே என்னவேலை? கல்விக்கமிட்டி கூடுகிறதா? இல்லையானால், சின்னக்காஞ்சிபுரம் கிளை வைத்திய சாலைக்குப் போயிருக்கிறார், வர சற்றுநேரமாகும்.

நமது ஊர், டாக்டர் சீனுவாசன் அவர்களைப் பற்றி நீங்கள் யார் விசாரித்தாலும், மேலே உள்ள வகையான பதில்தான் கிடைக்கும்.

எனக்கொன்றும் நோய் இல்லை அவரைத்தேட! நான் அவரைக்கூப்பிட விரும்புவது ஊராருக்காகத்தான், உங்களுக்காகத்தான்! அவர் பிறந்தது புதுக்கோட்டை, இருப்பது இங்கு; இருப்பது என்றால், உங்களைப்போல சும்மா இல்லை! இந்த ஊர் சேர்மனாக இருக்கிறார். இந்த ஊர் வட்டாரத்து M. L. A., வாக இருக்கிறார்! இந்த ஊர் காங்கிரசின் தலைவராக இருக்கிறார்! அதுமட்டுமில்லை. இந்த ஊருக்குப் பாதுகாப்புச்சங்கம் இருக்கிறதே (இருக்கிறதென்பதை இப்போதாவது தெரிந்துகொள்ளுங்கள்) அதற்கும் அவரேதலைவர்! நான், அந்த விஷயமாகத்தான் அவரைக்காண விரும்புகிறேன்!

காஞ்சிபுரத்திலே சங்கு ஊதப்பட்டது பரீட்சார்த்தமாக! முதல்தடவைச் சரியாகக் காதிலே விழவில்லை! காஞ்சிபுரத்திலே (A R P) வார்டர்கள் இருக்கிறார்கள். ஆனால் A. R. P. வார்டர்களுக்குப் பயிற்சி முடியவில்லை! காஞ்சிபுரத்திலே தீயணைக்கும் மோட்டார்கள் தேவை என்று A. R. P. அதிகாரி வற்புறுத்திக்கூறியிருக்கிறார். ஆனால் தீயணைக்கும் புதிய மோட்டார்கள் காஞ்சீபுரத்திற்கு இன்னம் வரக்காணோம்! காஞ்சீபுறத்துக்கு, ஒரு ஊர்காப்புச்சங்கம் இருக்கிறது. ஊர் காப்புச்சங்கம் செய்யும் வேலை என்னவென்று தெரியக்காணோம்! அந்த சங்கத்துக்கு ஒரு தலைவர் இருக்கிறார். இதுவிஷயமாக. அந்தத் தலைவர் டாக்டர் சீனுவாசன், எங்கே என்ன செய்கிறார் என்பது தெரியவில்லை! விளக்கிருக்கிறது, ஒளியில்லை! பழமிருக்கிறது ருசியில்லை! மலரிருக்கிறது, மணமில்லை! என்றுரைப்பதுபோல், காஞ்சீபுரத்தில், இது விஷயமான நிலைமை இருக்கிறது!

ஆனால், காஞ்சீபுறம் யுத்தப்பிரதேசத்தின் பக்கப்பிரதேசம்! வானவீதி வழியாக விமானங்கள் சென்னையிலிருந்து இங்குவர 23-மைல்கள்தான் உள்ளன! மூன்று மாதங்கட்கு முன்பே, இங்கு, பதுங்குங்குழிகள் வெட்டிக்கொள்ளுங்கள் என்று சப் கலெக்டர் பிரசங்கம் செய்துவிட்டார். ஊர் காப்புச்சங்கம் ஒன்று ஏற்பாடாயிற்று. அதனை ஏற்காமல், டாக்டர், சீனுவாசன் அவர்கள் தாமே முன்னின்று புதிதாக ஓர் ஊர்காப்புச் சங்கம் துவக்கினார்.

இத்தகைய காஞ்சீபுறத்தில்தான் நான், ஊர் காப்புச்சங்கத்தின் தலைவர் எங்கே? என்று உரத்த குரலிற் கூவவேண்டி இருக்கிறது! எங்கே அவர்? ஊர் காப்புக்காக என்ன செய்தார்? என்ன செய்யப் போகிறார்? ஏதாவது திட்டம் இருக்கிறதா? தெரிந்தவர்கள் கூறுங்கள் கேட்போம்!

காஞ்சீபுறத்தில், கடந்த சில வாரங்களாகவே, மாதங்களாகக்கூட, சென்னை மக்கள், வந்து சேருகின்றனர். ஒரு வாரமாக வருவோரின் தொகை அதிகரித்துவிட்டது. 6-ந்தேதிக்குப்பிறகு, விநாடிக்கொரு மோட்டார் வருகிறது, பதைத்துக்கொண்டு பல ஆயிரமக்கள், இங்கு வந்தபடி உள்ளனர்.

வார்சாவிலே, குண்டுமழையாம்! பொடி பொடியாகிவிட்டதாம் கட்டடங்கள்! ராட்டர்டாமில் தூளாக்கி விட்டானாம்! லண்டன் தரை மட்டமாகி விட்டதாம்! என்று காப்பிசாப்பிட்டுக்கொண்டே கவலையற்றும் களிப்போடும் கூறிக்கொண்டிருந்தவர்கள், சற்று அச்சத்தோடு, பினங்கு போய்விட்டதாமே, கோலாலம்பூர் பிடிபட்டதாமே என்று பேசத்தொடங்கி, பின்னர் சிங்கப்பூரில் விமானங்கள் குண்டு வீசிப் பெருஞ்சேதமாம், ரங்கூனில் நிலாவெளிச்சத்தின்போது குண்டுகள் போட்டானாம், ஏராளமான நஷ்டமாம் என்று ஏக்கத்தோடு கூறவேண்டி நேரிட்டதுடன், கொழும்புவில் 75-விமானங்கள் பறந்தனவாம், 'குண்டுவீச்சு $2\frac{1}{2}$-மணி நேரம் நடந்ததாம் என்று குமுறி, இன்று, விசாகப்பட்டினத்திலும் காகிநாடாவிலும் எதிரியின் விமானங்கள் குண்டு வீசினவாம் என்று விசாரத்துடன் கூறி, சென்னையில் விடியற்காலை 4-30க்கு விமானப்படையெடுப்பு அபாயச்சங்கு ஊதப்பட்டு, 6-5க்குத்தான், தெளிந்ததாம், என்று திகிலோடு பேசிக்கொண்டும், தெருவுக்கு வந்ததும், தம்மையு மறியாமல் வானத்தை நோக்குவதும், எந்த சத்தம்

கேட்டாலும், விமானசத்தமோ என்று சஞ்சலத்தோடு கலந்த சந்தேகப்படுவதும், விளையாட்டுப் பிள்ளைகள் ஊதுகுழல் சத்தத்திலிருந்து வீட்டுக்கதவு சாத்தப்படும் சத்தம்வரை, எந்தச் சத்தம்கேட்டாலும் திகில்படுவதுமாக இருக்கும் நிலை ஏற்பட்டு விட்டது.

வீட்டுக்கு வெளியே இருந்தால் குண்டு தலைமீது விழும் என்றுபயம். வீட்டுக்குள்ளே இருந்தால், கட்டடம் இடிந்து தலைமீது சாயுமே என்று அச்சம். என்ன செய்வது? எங்கே செல்வது? எப்படித்தப்பிப் பிழைப்பது? என்று மக்கள் தத்தளிக்கின்றனர். இத்தகைய தத்தளிப்பின் காரணமாக, ஒரு சிலர் தாறுமாறான கருத்துக்களையும் வளர்த்துக்கொள்கின்றனர். ஒரு சிலர் தாறுமாறாகவும் பேசுகின்றனர். பலர் தலைகுனிந்தவண்ணம் இருக்கின்றனர். யாருக்கு எந்த விநாடியில், எத்தகைய ஆபத்து நேரிடுமோ என்ற அச்சம், மக்களைப்பிடித்து. ஆட்டிவைக்கிறது. முகத்திலே சோகம் குடிகொண்டு விட்டது. ஊர்களிலே இருட்டு வாசஞ் செய்கிறது. பயங்கரமான எண்ணங்கள் உண்டாகி மக்கள் மருட்டப்படுகின்றனர். எந்த விநாடியிலும், எந்த இடத்திலும், இதைப்பற்றியே நினைப்பு, இதைப்பற்றியே பேச்சு! யார் யாரைக்கண்டாலும் முதலில் கேட்பது, "என்னவிசேஷம் பேப்பரில்! நாகப்பட்டினத்திலே என்னமோ நடந்ததாமே வாஸ்தவந்தானா? காரைக்காலிலே குண்டு வீசினானாமே, நிஜமாகவா?" என்று குண்டு வீச்சுவிஷயத்தைப்பற்றித்தான். அதற்குப் பிறகு, "காலம் இப்படிக்கெட்டு விட்டது பார்த்தீர்களா?" என்று பேசுவதும், "என்ன நடக்குமோ யார் கண்டார்கள்" என்று சொல்வதுமாக மக்கள் மனங்குழம்பிப்போயிருக்கிறார்கள். இந்தக்குழப்பம், குண்டு விசாகப்பட்டினத்திலும், காகிநாடாவிலும் வீசப்பட்டது என்ற செய்தி தெரிந்ததிலிருந்து அதிகரித்து விட்டது. "இந்தியாவுக்கு ஒன்றும் வராது! எதிரி இங்கே வரமாட்டான். அவனுக்கு நம்மிடம் என்ன விரோதம்? வெள்ளைக்காரனிடந்தான் அவனுக்கிருக்கும் சண்டை என்று கூறிவந்ததை இப்போது பெரும்பாலானவர்கள் மறந்துவிட்டனர். தவறான எண்ணங்கொண்டிருந்ததற்காக வருந்தியும் வருகிறார்கள். சிலர் இருக்கிறார்கள், சில்லுண்டிக் குணத்தில் முதல் பரிசுக்காரர்கள், அவர்களுக்கு என்றைக்கும் தெளிவு ஏற்படாது. பன்னாடை, அழுக்கைமட்டுமே நிறுத்திக்கொள்வது போல், பறந்துக்கு, செத்த எலி, வளையில் நுழையும் நண்டு ஆகியவற்றின் மீதே கண்ணோட்டமேற்படுவதுபோல, இவர்களுக்கு, விஷமத்தனத்தைமட்டுமே வளர்க்கத்தெரியும்! அந்த மனிதப்பன்னாடைகள் தவிர மற்றையோர், இன்றைய பயங்கரமான நிலைமையைப்பற்றி உள்ளபடிகலங்குகிறார்கள். இந்தக்கலக்கத்தைப்போக்கும் கடமை, பீதியை அடக்கும்பணி, ஊர்க்காப்புச்சங்கத்தைச் சார்ந்தது என்பதை நான், அந்த சங்கத்தின் கவனத்திற்குக்கொண்டுவர விரும்புகிறேன். சென்னையிலிருந்து, காஞ்சீபுறத்தை வந்தடைந்துள்ள மக்கள், தங்கும் இடம், அவர்களின் சாதாரண தேவைகளுக்குமார்க்கம் தேடித்தரவேண்டியதும், அவர்களை விசாரித்து விசாரத்தைப்போக்கி, உபசரித்துத் தேறுதல்கூறி, ஊரில் குடியேறவிரும்பினால், உபகாரம் செய்யவேண்டியதும் ஊர்காப்புச் சங்கத்தின் வேலை.

"மூட்டையும் முடிச்சுமாக ஓடிவருவதைப் பாருங்கள்!" என்று அவர்கள், மோட்டாரிலோ, வண்டியிலோ, வருகிறபோது தெருத்திண்ணையில் உட்கார்ந்துகொண்டு பார்ப்பதும், பேசுவதுமாக ஊர்காப்புச்சங்க மெம்பர்கள் உள்ளனர்! அவர்கள்மீது தப்பில்லை. அவர்களை இன்னின்ன காரியத்தைச் செய்யவேண்டும் என்று ஊர்காப்புச் சங்கத்தலைவர், உரைக்கவேண்டும், செய்து காட்டவேண்டும், பழக்கத்தை ஏற்படுத்தியிருக்கவேண்டும். காகிதச்சங்கம் கவைக்கு உதவாது! தமது பெயருடன் ஓர்விருது என்று போட்டுக்கொள்வதற்கு மட்டுமே, ஊர்காப்புச்சங்கம் இருக்கிறதென்று டாக்டர் எண்ணமாட்டார் என்று இன்னமும் நம்புகிறேன்.

டாக்டர் கிடைக்கவில்லை என்பதற்காக நோயை வளர்த்துக்கொள்ளலாமா! டாக்டர் சீனுவாசன் அவர்களிடம் ஊர்பாதுகாப்பு இருக்கிறது என்றெண்ணிக்கொண்டு, சும்மா இருப்பது நல்லதாகாது!

சென்னையில், ஏதேனும் விபரீதம் ஏற்பட்டால், காஞ்சீபுரத்துக்கு இன்னமும்பல ஆயிரமக்கள் வருவர். மனக்குழப்பமும் திகிலும் பன்மடங்கு அதிகரிக்கும். அதைச் சமாளிக்க, காஞ்சீபுரவாசிகள் பக்குவமாக வேண்டும்.

எனக்குத்தெரியும், மதம், வேதாந்தம், முதலிய எதுவும், இத்தகைய நெருக்கடியான நேரத்தில், பரீட்சிக்கப்பட்டால் தோற்றுப்போகுமென்று. உங்களிடம் சொன்னால், நீங்கள் வீணைக்கோபித்துக் கொள்வீர்கள், விஷயத்தை அலசிப்பார்க்கமாட்டீர்கள்! அந்த வழக்கத்தைத்தான் நம்மவர்கள் கைவிட்டு நெடுநாட்களாகி விட்டனவே!

குண்டுவீச்சு ஏற்படாதவரை, விபத்துஏற்படாத வரையில், "நாம் யாருக்கு என்ன கெடுதிசெய்தோம். நமக்கேன் கஷ்டம் வருகிறது? அவன் ஒருவன் இல்லையா மேலே!" என்று பேசுவார்கள். விழுந்தால் "அடஆண்டவனே! உன்கோயிலிலே இடிவிழ. ஏண்டா இப்படிப் பாடுபடுத்துகிறாய். நான்என்ன செய்தேன் இந்தத்தண்டனையை அனுபவிக்க" என்று ஓலமிடுவார்கள். இதுசகஜம். ஆகவே, இத்தகைய யோசனைகளை விட்டு விட்டு, ஆபத்துவந்தாலும், என்னநேரிட்டாலும், கலங்கக்கூடாது என்று மனதில் திடம் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். நெஞ்சங் குமுறுவதை அடக்காவிட்டால், கோழைத்தனம் வளர்ந்துவிடும். கோழைகளைமிரட்ட குண்டுகூடத் தேவையில்லை! நிழலைக்கண்டாலும் மிரளுவர்.

நமது மக்களின் செவிகள், நல்லகானம், இனிய வாத்தியம், சுவையுள்ள பேச்சு, மழலை, ஊடல் உரை ஆகியவைகளையும், சிற்சில சமயங்களில், தப்புதண்டாக்காரரின் கூக்குரலையும், சதாகாலமும் கோயில் வெடிச் சத்தங்களையுமட்டுமே கேட்டுப் பழக்கப்பட்டவை! சண்டை! சண்டை! என்று பத்திரிகைகளில் படித்துக்கேட்டவர்களே தவிற, எதிரிப்படைகளின் எக்காளம், ஆயுதங்களின் ஆர்ப்பரிப்பு, குண்டுவீச்சுச் சத்தம், அதனால் கட்டடங்கள் சரியும்சத்தம், அதனடியிற் சிக்குண்டோர் கூவும் கோரமான சத்தம், விமானப்போர் சத்தம், பீரங்கி வேட்டுச்சத்தம், டாங்கியை டாங்கி மோதும்போது எழும் சத்தம், ஆகியவைகளைக் கேட்டுப் பழக்கமில்லாத செவிகள் படைத்தவர்கள் நமது மக்கள்! ஆனால் எத்தனைகாலத்துக்கு செவிக்கு ருசிமட்டுமே கிடைத்துக் கொண்டிருக்கும்!!

எந்த வெள்ளைக்காரரைக் கண்டிக்கும் வெட்டிவேலையை நாம் கற்றுக்கொண்டோமோ, அந்த வெள்ளைக்காரன் இந்த நாட்டில் இருந்து வந்ததால், இன்று நாம்படும் பதைப்பு, பயம், திகில், கடந்த 150 ஆண்டுகளாக நமக்கு இல்லாமலிருந்தது. பிரிட்டன் கடலரசியாக இருக்குங் காரணத்தால், நமது நாட்டுக்கடலோரங்கள் காப்பாற்றப்பட்டுவந்தன. இப்போது, பிரிட்டன் சங்கடத்துக்குள்ளானதால், பிரிட்டனுக்கு ஏற்பட்டிருப்பதைவிடக் கொடிய கவலை, இங்கு, நமக்கு உண்டாகி விட்டது.

பாருங்கள் கூர்ந்து, அதோவரும் மக்களை! சென்னையிலே இன்னமும் ஒன்றும் நேரிட்டுவிடவில்லை! எனினும், அவர்களின் முகத்தைப்பாருங்கள், எவ்வளவு திகில்! கைகால் நடுங்குவதைக் காணுங்கள்!

[12-ம் பக்கம் பார்க்க.]

அறிவியற் பகுதி

இந்து மதமுந் தமிழரும்

நக்கீரன்.

முன் தொடர்ச்சி.

இனிப், பிழைக்க வழியின்றி இந் நாவலந்தீவில் வந்து குடியேறிய ஆரியர்கள், தமிழ்மக்களின் நாகரிக வாழ்க்கையின் மேம்பாட்டையும், வறுமையும் கவலையுமற்ற வாழ்க்கை முறைக்கேற்ப அவர்கள் வகுத்துக் கொண்டிருக்கும் பலவகையான சிறந்த தொழின் முறைகளையும், சாதிகுலம் பிறப்பு முதலானவற்றால் பிரிவோ பிளவோ இல்லாத ஒற்றுமையையுங் கண்டு, தாமும் அவர்களைப்போலச் செல்வவாழ்க்கையில் திளைத்திருக்க எண்ணினார்கள். ஆனால், அவர்கள் எந்தக் காலத்திலும் தாமாகவே பாடுபட்டுத் தங்கள் வாழ்க்கைக்கு வகை தேடிக்கொள்ளாது, ஊர் சுற்றித் திரியும் வழக்கத்தை மேற்கொண்டு கூத்தாடிப் பிழைத்தவர்களாகையால், தமிழ்மக்களைப்போல் தன்மதிப்பு வாய்ந்த வாழ்க்கை முறையை வகுத்துக்கொள்ள முடியாது போயிற்று. போகவே, அவர்கள், தாங்கள் பிழைப்பதற்கு ஒரு வழியைக் கண்டுபிடித்தார்கள். அவ்வழிதான் இன்றைக்கு நம் நாட்டில் 'இந்துமதம்' என்ற பெயரால் வைத்து வழங்கப்படும் பகுத்தறிவுக் கொவ்வாப் பழக்கமாம். அக்காலத்திருந்த தமிழ் வேந்தரும், தமிழ்ச் செல்வரும், தமிழ்ப் புலவரும் கள்ளங் கவடற்ற தூய உள்ளத்தினராய் இருந்தமையின், ஆரியருடைய கவட உரைகளைப் பொய்யெனத் தள்ளாது மெய்யெனக்கொள்ள வேண்டி ஏற்பட்டது. ஆரியர்கள் அக்காலத்திருந்த தமிழ்வேந்தரை அணுகி, "நாங்கள் வடக்கே பெருந் தொலைவில் அதாவது கடவுளர் வாழும் கைலாயம்-வைகுந்தம் முதலான ஊர்களில் இருப்பவர்கள்; நாங்கள் உலகத்தைப் படைத்த பிரமாவின் முதற் பிள்ளைகளாய் அவர் தலையினின்றும் பிறந்தவர்கள்; ஆதலால், எங்களைப் "பிராமணர்" என்றழைத்து வழிபடுவதும் எங்களை ஆதரிப்பதும், நிலம்புரக்கும் வேந்தர்களாகிய நும்முடையவும் நும் குடிகளுடையவும் கடனும்; இது நாங்கள் சொல்வதல்ல; எங்கள் உள்ளத்தில் என்றைக்கும் பிரியாதிருக்கும் எம்பெருமான் திருவருளால் உண்டாகும் அருண் மொழிகள்; ஆதலால் இவற்றை நீவிர் புறக்கணித்தல் பெருங் குற்றமாகும்" என்று அவர்களை மிக எளிதில் ஏமாற்றிச், சூதுவாதற்ற தமிழ்ப் பெருமக்களைத் தம்வயப்படுத்தி அறிவுக்கும் இயற்கைக்கும் பொருந்தாத மிக அருவருப்பான கடவுட் கொள்கைகளைத் தூய உள்ளம் படைத்த தமிழ் மக்களிடம் பதிய வைத்ததோடு, நூல் வடிவிலும் அவற்றைத் தொகுத்து வைத்துத் தங்கள் உடம்பு வளையா வாழ்க்கை முறைக்கு வழி தேடிக் கொண்டார்கள்.

இனி, ஆரியர்கள் தங்கள் பிழைப்புக்கு வழி கோலிய திட்டங்களை நிலைபெறச் செய்வதற்காக, "உலகத்திலுள்ள எல்லா இன்ப விருப்பமும் துன்ப வெறுப்புமே இயற்கையாய்க் காணப்படுகின்றது; இவ்வுலக இன்பங்கள் எல்லாம் நிலையில்லாத சிற்றின்பங்களாகவே இருக்கின்றன; அதனாலேயே அறிவுடையவர்கள் நிலைபெறுஞ் பேரின்பத்தையடைய முயல்கின்றார்கள்; அவ்வாறு பேரின்பத்தையடைய அறிவுடையோர் கொண்டொழுகும் வழியே 'இந்துமதம்' என்ற பெயரால் அழைக்கப்படுவது" என்று கூறியதோடு அதற்கேற்பப் பல கட்டுரைகளையும் எழுதி இந்துமத நூல்கள் பலவற்றை உண்டாக்கி, அவை தம்மை எல்லாம் நம்பும்படியுஞ் செய்துவிட்டனர். இந்துமத நூல்கள் நுவலும் கதைகள் ஒவ்வொன்றும் மக்களின் உள்ளம் கரையத் தக்கனவாயும், இரங்கத் தக்கனவாயும், வியக்கத்தக்கனவாயும், மக்களின் அறிவாற்றலுக்கு அப்பாற்பட்டனவாயும் காணப்பட்டமையால், தமிழ் மக்கள் அவற்றை மெய்யென நம்பியதோடு, அக்கதைகள் எல்லாம் கடவுளால் அருளிச்செய்யப்பட்டனவும், கடவுளின் திருவிளையாடல்களைக் குறிப்பனவும், கடவுளின் ஆணையாக எழுந்த சட்டதிட்டங்களும் என்ற ஆரியர்களின் புளுகையும் அவர்கள் ஒப்புக்கொண்டு, ஆரியர்க்கு வேண்டிய உதவிகளெல்லாஞ் செய்து கொடுத்து, அவர்களைத் தங்கள் குருமாராகவும் ஏற்றுக்கொண்டார்கள். பொய்மெய்களை ஆராய்ந்து உண்மை காணும் ஆராய்ச்சிக் காலமாகிய இவ் இருபதாம் நூற்றாண்டிலுங்கூட, "நாங்கள் காசிக்குச் சென்று கங்கையிலாடி விசுவநாதரை நேரில் வழிபடக்கொடுத்து வைக்காவிட்டாலும், காசிக்குப்போய் வந்தவரை வழிபட்டால், அந்தப் பலன் நமக்கும் கிடைக்கும்" என்று கருதி அவர் காலடியில்விழுந்து காணிக்கை செலுத்தி வணங்கி நீறு வாங்கி அணிந்து மகிழும் மக்கட்கூட்டம் இன்னும் இருக்கின்றனர் என்றால், அக்காலத்திருந்த கள்ளங்கவடற்ற தமிழ்மக்கள், ஆரியர்களைக் குருமாராகக் கொண்டு, அவர்கள் கூறியவற்றை எல்லாம் மெய்யெனநம்பிவழிபட்டது ஒருவியப்பல்ல. இதுநிற்க.

இனி, மேற்சொன்ன இந்துமதத்தின் ஒரு பிரிவாகிய சைவமதக் குரவர் நால்வருள் ஒருவரான திருநாவுக்கரசர், தாம் ஆரியர் கூறிய கடவுளை நேரில் காண்பதற்காகக், கடவுள் வடக்கே பெருந்தொலைவில் இருப்பதாகக்கூறிய ஆரியர் சொல்லை நம்பி தம்முடைய காலுந் தலையுந்தேய நடந்தும், உடம்பால் உருண்டும், பின் அடைய முடியாது களைப்புற்றுக் கிடந்தபோது, அங்கொருவர் தோன்றி அவரைத்தேற்றிப் பக்கத்திலிருந்த ஒரு குளத்தினைக் காண்பித்து, அதில் மூழ்கித் திருவையாற்றிலுள்ள குளத்தில் எழுந்து அங்கு கடவுளைக்கண்டு வணங்கி மகிழும்படி கூறியதாகவும், அங்ஙனமே திருநாவுக்கரசரும் அக்குளத்துள் மூழ்கி 2500 கல் தொலைவுக்கு இப்பாலுள்ள திருவையாற்றுக் குளத்தில் தோன்றிக் கடவுளைக் கண்டு, "மாதர்ப்பிறைக் கண்ணியானை" என்ற தேவாரத்தைப் பாடியதாகவும் கூறப்படும் பெரியபுராணப் பெரும் புளுகை நம்பாத சைவத் தமிழ்மக்கள் எவரும் இலர் என்று துணிந்து கூறக்கூடிய இக்காலத்தை நோக்கும்போது, 3000, 4000, ஆண்டுகட்கு முற்பட்ட அக்காலத் தமிழ்மக்கள் ஆரியர் வலையிற் சிக்குண்டு இந்துமதம் என்னும் கொடிய நோயாற் பீடிக்கப்பட்டதும் ஒரு வியப்பல்ல. இனி, இத்தேவாரத்தில், திருநாவுக்கரசர் தாம் தம்முடைய காற்சுவடு நிலத்தில் படாமலே கேதாரம் என்னும் இடத்திலிருந்து திருவையாற்றுக்கு வந்ததாக "யாதுஞ் சுவடு படாமல் ஐயாறடைகின்றபோது" என்னுஞ் சொற்களால் வலியுறுத்துகிறார். இது வியப்பினும் வியப்பே.

[தொடரும்.]

"முன்னேற்றம்"

திருநெல்வேலி ஜில்லா முஸ்லீம் லீகின் ஆதரவில் வெளிவரும் மாதமலர், "முன்னேற்றம்" தனிப்பிரதி விலை 0—1—6. புத்தகவடிவில் அழகுற விளங்கும் இப்பத்திரிகையில், மார்க்க விஷயங்களும், முஸ்லீம் லீகின் செய்திகளும், அறிஞர்களின் கட்டுரைகளும் உள்ளன. இஸ்லாமியரும் தமிழரும் இதனை ஆதரிக்க வேண்டுகிறோம். வேண்டுவோர் திருநெல்வேலி முஸ்லீம் லீக் ஆபீசுக்கு எழுதவும்.

இளைஞனின் கனவு அல்லது பாக்கிஸ்தான் பிரேமை!

—கோவை M. A. ரஹ்மான்

அனல் வீசும், கடும் வெய்யில்! மண்டை உருகும் மத்தியானவேளை! வானமெங்கும் நீலநிறம். இடையிடையே சிறிய வெண்மேகங்கள் அங்குமிங்கும் உலாவுகின்றன. நதியோ நிலத்தில், பெருங்கானகத்தைப் பிளந்துக்கொண்டு, வெள்ளப்பெருக்கெடுத்து வெகுவேகமாக ஓடுகின்றது. இருமருங்கிலும் பசும் புல்தரை! அடுத்தாற்போல் ஓர் :பெரிய மாமரம். அதனடியில் ஓர் ஆணழகன் அயர்ந்த நித்திரையிலிருக்கிறான். அவன் தலையிலிருந்த சிவப்பு துருக்கிகுல்லாய் பக்கத்தில் உருண்டுகிடந்தது. சியால்கோட் செல்லும் சிறுவனோ, அன்றி இளம் பிறைசங்கத் தொண்டனோ தெரியவில்லை. அவன்மார்புமீது ஒரு புத்தகம்! அதன் அட்டையில் அழகிய இந்திய தீபகற்பத்தின் படம்! அதில் பச்சைவர்ணம் தீட்டப்பட்ட பகுதியின்மீது அவ்விளைஞனின்கரம் பதிந்திருந்தது!

உறக்கத்தில் குறட்டை சப்தம் அதிகமாக கேட்டது. இளைஞனின் மலர்ந்த முகத்தில் பல மாறுதல்கள் காணப்பட்டன! அவன் நரம்புகள் துடித்தன! புன்முறுவலும் அதிகமான கோபக்குறியும் தென்பட்டது! அதிசயக்கத்தக்க வண்ணம் திடீரென்று அவன் வாயிலிருந்து "ஹிந்துஸ்தான் ஹமாரா" என்று ஓசை இருமுறை வெளிவந்தது! ஆனால் கண்கள்மட்டும் திறக்கப்படவில்லை.

காலஞ்சென்ற கவித்திலகம் சர். இக்பாலின்கீதம் அவன் வாயிலிருந்து வரக்காரணம் என்ன? அதுவும் அது கடுங்கோபத்துடன் கிளம்புவானேன்? அவன் மார்புமீதிருந்த புத்தகம் மனதை மாற்றி இருக்குமா? வாஸ்தவம்தான், இது உண்மையாக இருக்கலாம். இன்றேல் கனவில் கடுங்கோபத்துடன் "இந்தியா நம்முடையது" என்றபொருள் கொள்ளும் கீதம் இளைஞனின் உள்ளத்திலிருந்து கிளம்பக்காரணமே இல்லை. ஏன் அப்படிப்பட்ட சொற்கள் அவன் வாயிலிருந்து கிளம்பின? இந்தியாவில் அவன் வகுப்பார் பெரும்பான்மையினரல்ல; அங்ஙனமிருக்க அவன் ஆத்திரப்பட்டுக்கூறியது ஏனோ!

மேலே செப்பியபடி ஒருகால் அவன் மார்புமீதிருந்த இந்தியதேச சரித்திர புத்தகம் அவன் கனவில் தோன்றி, அதிலுள்ள இஸ்லாமிய மன்னர்களின் ஆட்சிப்படலம் அவர்களின் நேர்மை, வீரம், இறுதியில் வீழ்ச்சியுற்றதின் காரணங்கள், எதிரிகள் அன்று செய்த அக்கிரமங்கள், சூட்சிகள், ஆகியவைகள் அவ்விளைஞனின் மனதைமாற்றி இருக்கலாம். ஆதியில் வெற்றிகரமாக "சிந்தை" வென்ற வீர வாலிபர் முஹம்மத்பின் காஸிமின் சரிதை அயர்ந்த நித்திரையிலிருந்த அவனை அங்ஙனம் தைரியமாகக் கூறத் தூண்டியிருக்குமா? அன்றி "கோரிவம்ச" கீர்த்தியும், "கஜ்னிவம்ச" வீரமும் அங்ஙனம் கூறத்தூண்டியிருக்குமா? அன்றி மைசூர் மன்னனை பணியச்செய்து, மதுரை மன்னனை மிரளச்செய்து, சன்மானங்கள் ஏராளமாகப்பெற்று, தென்கோடிவரையில் முன்னேறி இறுதியில் ஆங்கொரு (காயல்பட்டினத்தில்) மஸ்ஜிது கட்டி, அழியாப்புகழ்பெற்ற அரசர் அலாவுத்தீனின் சேனாதிபதியான மகாவீரர் மலிக்கபூரின் "கில்ஜி வம்ச" பிரதாபம்தான் அங்ஙனம் கூறத்தூண்டியிருக்குமா? அன்றி லோடிவம்ச ஆட்சி, வீழ்ச்சிக்குப்பின்; மங்கோலிய மாதரசிக்கும், துருக்கிய தீரனுக்கும் அவதரித்த, "பாபரின்" மொகலாய சக்ராதிபத்யம் அங்ஙனம் கூறத்தூண்டியிருக்குமா? அன்றி மொகலாய வம்ச பரம்பரையிலுதித்த் "அக்பரின்" பெருமைப்படத்தக்க ஆட்சியோ, ஹஸ்ரத் அவுரங்கஜேப் பாதுஷாவின், அன்னியர் இன்றும் பொறாமைப் படத்தக்க ஆட்சியோ, இடைக்காலத்தில் கட்டப்பட்ட, உலகம் உள்ளளவும் கண்டு பிரமிக்கும் வண்ணம் பரிணமிக்கும் மகா அதிசயமான தாஜ்மஹாலின் படமோ, பரந்த டில்லி ஜும்ஆம்ஸ்ஜிதின் சித்திரமோ, எல்லாவற்றிற்கும் முன்பு கட்டப்பட்ட "குத்மினார்" என்ற உயர மானஸ்தூபியோ, பண்டைக்காலத்தில் கட்டப்பட்ட சுல்தான்களின் கோட்டைக் கொத்தளங்களோ, அவற்றிற்கிடையே காணப்படும் உடைந்த உறைவாட்கள் பழைய பீரங்கிகள், துருப்பிடித்த துப்பாக்கிகள் ஆகியவைகளோ, கனவில் காணப்பட்டு அவ்விளைஞனை அங்ஙனம் கூறத்தூண்டியிருக்குமா? அன்றி சொற்ப வீரர்களைக்கொண்டு லட்சம் மராட்டிய வீரர்கள் அடங்கிய மாபெரும் மராட்டிய "பேஷ்வா" சேனையை வென்று, மராட்டிய ஏகாதிபத்தியத்தையே வேரோடு வெட்டிச் சாய்த்த மூன்றாவது பாணிபட் யுத்தமகாவீர தளபதி "அஹமதுஷா ஆப்தாபலி" யின் பராக்கிரமமும் அவர் சுயநலம் ஒன்றும் கருதாமல், தான் ஜெயித்த நாட்டைக் கூட ஆளாமல், பின்னர் ஆங்கிலேயர் ஆட்சிக்குவரஹேதுவாகும் வகையில் கவலையற்று தாய்நாடு திரும்பிவிட்டாரே என்ற கவலையும் கனவில் நினைவாகி, அதேசமயத்தில் குஜ்ராத், பீஜப்பூர், மைசூர், கர்நாடகம், வங்காளம், ஆகியவற்றின், பாதுஷாக்கள் நவாபுகள், சுல்தான்கள், ஆகியவர்களின் ஆட்சிகள், ஐந்தாம் படையினர், மீர்ஜாபர்கள், ஆகியவர்களின் சூட்சியால் அழிந்த ஆற்றொணாத்துயரந்தரும் அத்தியாயங்களும் அவன் கவனத்தில் வந்து "இந்தியா நம்முடையது" என்ற பொருள்படும் "ஹிந்துஸ்தான் ஹமாரா" என்ற உருது வாசகத்தை உபயோகிக்க அவ்விளைஞனை தூண்டியிருக்குமா? என்றும் இன்னும் பற்பல உள்ளத்தைக் கொள்ளைக்கொள்ளும் சரிதைகளையும் நினைத்துக்கொண்டு மௌனமாக இருந்தேன்.

தினகரனும் சற்று சாய்ந்தான்! கொஞ்சம் குளிர்ந்த தென்றலும் அடித்தது! கண்ணைத்துடைத்துக்கொண்டு, அயர்ந்த நித்திரையிலிருந்த இளைஞன் திடீரென எழுந்திருந்தான் தரையில் உருண்டுகிடந்த தனது துருக்கிக்குல்லாய் நழுவி நீரிற்போய் விழுந்துவிடாவண்ணம்அதைத்தாவி எடுத்துத் துடைத்து தலையில் போட்டுக்கொண்டு, உடைகளை உதறியவண்ணம் வந்தவழிநோக்கி அவசர அவசரமாக நடக்கலானான். போனவேகத்தில் அவன் ஜேபியிலிருந்து ஒருதுண்டு கடுதாசி, கீழே விழுந்துவிட்டது! இளைஞன் ஏன் "இந்துஸ்தான் ஹமாரா" என்று கனவில் கூறினான் என்ற ஆராய்ச்சியில் தலைமறைவாக மரத்தின் பின்புறம் !நின்றுகொண்டிருந்த யான் சீக்கிரம் சென்று அக்கடுதாசித்துண்டை எடுத்தேன்! படித்துப்பார்த்தபிறகு அது லாகூரில் அண்மையில் நடைபெற்ற பஞ்சாப் மாகாண மாணவர் பாக்கிஸ்தான் மகாநாட்டு முதல் வகுப்பு டிக்கட் என்பது தெரியவந்தது! உடனே உறங்கிக்கொண்டிருந்த இளைஞனின் கனவு பாக்கிஸ்தான் பிரேமை! என்பதை உணர்ந்து மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன்.

ரோமாபுரி ராணிகளின் லீலா விநோதம்

[வீனஸ்.]

ஜாலக்காரி ஜூலியா!

காடு நிலமானதும், வனம் தோட்டமானதும், மேடு மாளிகையானதும், கரம்பு ஊற்றானதும், பள்ளம் பாதையானதும், பாட்டாளியின் உழைப்பினால். ஆனால் அவன் அந்த உழைப்பிற்குப்பிறகு அதனாலான உல்லாசங்களை அனுபவிக்கிறானா? இல்லை! தோட்டத் தொழிலாளியின் வியர்வைவாடை அவனது உழைப்பால் மலர்ந்த மலரில் இராது! அவனது வாழ்க்கையோ கசப்பு, அவன் பயிரிட்டு பிறருக்குத் தரும் கனியோ, சுவையுள்ளது. பூமிக்கு அடியிலிருந்து அவன் செல்வத்தைச் செதுக்கி எடுத்துத்தருகிறான். ஆனால் அவன் செல்வவானாவதில்லை! குனிந்தும் குப்புறப்படுத்தும், ஏறியும் எரியும் வெயிலில் உழைத்தும் அவன் அண்டத்தைமுட்டும் மாளிகை அமைத்துத்தருகிறான், பிறகோ, அதன்மீது பணம் படைத்தபிரதாபன் உலவுவதைக்காண, அண்ணாந்து பார்த்துவிட்டு, தனது குடிசையில், கூரையின் ஒழுக்கலைக்கண்டு மனங்கசிகிறான். கடலிற் குளித்து, சுறாவுக்கும் பிறவுக்கும் இறையாகாதுதப்பி முத்து எடுக்கிறான், பின்னர் அதுயாருடைய கழுத்திலோ மாலையாகிறது, கை வளையாகிறது, காதுகளில் நடனமாடுகிறது, அந்த முத்து எடுத்த தொழிலாளி வறுமைக் கடலில் நீந்தி நீந்திக்கரை காணாது கலங்குகிறான். உழைப்பினால் உறுபயனை அனுபவிக்கமுடியாது அல்லற்படுகிறான்.

ரோம் சாம்ராஜ்யத்தை அமைத்த பேரரசன் அகஸ்டஸ், இதுபோன்ற நிலையையே அடைந்தான்! அவனது உழைப்பு உன்னதமான ஓர் அரசை உண்டாக்குவித்தது. அதன் பயனாக ஊராரிர்பலர் உல்லாசவாசிகளாயினர். அந்த சாம்ராஜ்யச் சிறப்பைக்கண்டு களித்தனர், அனுபவித்து அகமகிழ்ந்தனர். ஆனால் சாம்ராஜ்யத்தை உண்டாக்கிய, அகஸ்டசுக்கு மனநிம்மதி ஏற்படவில்லை. புகழ், செல்வம், செல்வாக்கு, தர்பார், இருந்தன, மனதில்மட்டும் ஆனந்தங்குடிகொள்ள மார்க்கமின்றிப் போய்விட்டது. உலகினர் பலரும்கண்டு பொறாமைப்பட்டனர், ஆனால், அகஸ்டசின்மனம் புழுங்கியதையார் அறிவார்கள்! தனது மகள், ரோம் சாம்ராஜ்யாதிபதியின் குமாரி கேவலம் ஒரு விபசாரிபோல் வாழ்ந்து வந்தாள், கண்டவனின் காமக்கருவியானாள் என்ற விஷயத்தைக்கேட்க நேரிட்டது அகஸ்டசுக்கு! அவனுக்குப்பிறகு மனதில் நிம்மதி ஏது? எரிமலைபோல் மனமாகிவிட்டது. திடீர் திடீரென எரிமலை, கனலைக்கக்குவதுபோல், கோபமும் சோகமும் அகஸ்டசின் மனதிற்கிளம்பின! அத்தகைய மனவாட்டத்தை, அவமானத்தைத் தந்த அடங்காப்பிடாரிதான் **ஜூலியா** எனும் அவனது குமாரி! கேளீர், அவளது காமச் சேட்டைகளை!!

அகஸ்டசுக்கும் அவனது மனைவி **ஸ்கிரிபோனியா**வுக்கும் தோன்றியவள் ஜூலியா. அகஸ்டஸ், லிவியாவைக்கலியாணம் செய்து கொள்ளுமுன்னம், ஸ்கிரிபோனியாவையே மாலையிட்டான். ஜூலியா பிறந்தாள். சோகவல்லி ஸ்கிரிபோனியாவின் வயற்றிலுதித்த இந்த வனிதை, குதூகலக்குமரியானாள்!

ஜூலியா, பெரிய ஜாலக்காரி! சிங்காரி! சிரித்துச் சித்திரவதை செய்யும் சொகுசுக்காரி! வெறும் அலங்காரி மட்டுமல்ல, பலே கைகாரி! சாதுர்யமான பேச்சுக்காரி! சரசத்திற்கு அதிகாரி! ஆடவர் கூட்டத்திற்கே அவளோர் சிகாரி! அகஸ்டசின் மானத்தைக் கெடுத்த அபசாரி!

ஜூலியாவின் அழகு, ஒளிவிட்டு வீசத்தொடங்கியது. அகஸ்டஸ், அவளைக் கட்டுதிட்டமெனும் திரையிட்டு மூடிவைத்தான். அவளைக்காப்பதே தன் கடனெனக்கொண்டு, விசேஷமான ஏற்பாடுகள் செய்தான். மங்கைப்பருவத்திலேயே இந்த மரகதவல்லியின் மனம், மரக்கிளைகளிற் தாவும் மந்திபோல், அங்குமிங்கும் தாவலாயிற்று. கண்களோ, பாய்ந்தவிடமெங்கும் வெற்றி பெற்றன! புன்சிரிப்போ, வீராதிவீரர்களையும் விநாடியில் வீழ்த்திற்று. அறிவும் குறும்புத்தனமும் கலந்த அவளது பேச்சோ, கவிகளின் கற்பனைச்சுவையையும், கானத்தையும் தோற்கடித்தது. அகஸ்டசின் வீரம் போலவே, அவனது மகள் ஜூலியாவின் சோபிதம் ரோம் சாம்ராஜ்யமெங்கும் வீசலாயிற்று. அகஸ்டஸ், எங்ஙனம், தனது பரந்த சாம்ராஜ்யத்தை, பிறர் சிதைக்கவொட்டாதபடி, பட்டாளங்களை அமைத்துப்பாதுகாத்து வந்தானோ அதுபோல், ஜூலியாவின் அழகைக்கண்டு சொக்கும் ஆடவர் கூட்டத்தால், அவளுக்கு இடையூறும் இழுக்கும் ஏற்படாதிருக்கவேண்டும் என்பதற்காக, அதிகாரத்தைக்கொண்டு, அவளைச்சுற்றி அரண்கள் எழுப்பினான்! அவள் வாலிபர்களுடன் பேசக்கூடாது, ராஜசபையிலன்றித்தனியே அவர்களிடம் பழகக்கூடாது. படிப்பு, பாட்டு, பரிபாலன விஷயம் ஆகியவைகளிலேயே அவள் தனது மனதைச் செலுத்தவேண்டும் என்று பலவிதத்திட்டங்கள் செய்து வைத்தான்! அலைகளையும், எண்ணத்தையும் அடக்க அகஸ்டசுக்கோ, வேறு யாருக்காகிலுங்கூட, அதிகாரம் ஏது! மேகங்கள் சூழ்ந்திருப்பினும், நிலவு, அவைகளைச் சிதறடித்துவிட்டுத் தனது ஒளியைப்பரப்பும் வகைபோல், அகஸ்டசின் அதிகார அரண்களைத் தூளாக்கிவிட்டு, ஜூலியா, சுயஸ்வரூபமெடுக்க அதிக காலம் பிடிக்கவில்லை!

அகஸ்டசின் கொலுமண்டபமோ, சொல்லொணாக் காட்சி! நீலவானத்தில் நட்சத்திரங்கள் ஜொலிப்பதுபோல், அகஸ்டசின் தர்பாரில், வெற்றிவீரர்கள், வேல்விழி மாதரையும், விற்பன்னர்கள் விகசித வனிதையரையும், ராஜதந்திரிகள் ரமணிகளையும், கவிவாணர்கள் கட்டழகிகளையும் கண்டும், விருந்துண்டும், களித்தும் கானங்கேட்டும், நடமாடியும் நர்த்தனமாடியும், பேசியும் கந்தம் பூசியும், ஆடியும் ஆனந்தத்தைத் தேடியும்அகமகிழ்ந்துவாழ்ந்தனர். இத்தகையஇடத்தில்

"பெண்ணோடு ஆணேபேசிடில் தனியே
பேத புத்தியாகுமே!"

என்ற பாடல் மிகப்பொருத்தமல்லவா! அதற்காகத்தான் அகஸ்டஸ் ஜூலியாவைத்தனியே பேசும் சந்தர்ப்பம் எழாதபடி, பாதுகாத்து வந்தான். ஆனால் அத்தகைய பாதுகாப்பு எத்தனை நாளைக்கு முடியும்! அதிலும் ஜூலியாவோ, இன்பவாழ்வுக்காக எதையும் விட்டுக்கொடுக்கத் துணிந்தவள்! போகபோக்கியங்களில் புரள்வதில் அலுக்காத அணங்கு. தந்தை வாள் வீச்சினால் தரணிபலவென்றார், நாம் நமது கடைக்கண்வீச்சினால், ஆடவர் பலரை அடிமைகொள்வோம்

(8ம் பக்கம் பார்க்க.)

"கஞ்சி நிதி லிமிடெட்"

காஞ்சீபுரம்.

28-வது ஸீரீஸ் ரூ. 1000, 500, 250, 100 & 50/-

ஏலச்சீட்டுகள்

15-4-42ல் ஆரம்பிக்கப்படும். சந்தாதார்களாக சேர விரும்புவோர்கள் உடனே விபரங்களுக்கு எழுதவும்.

K. R. சாரி, B. A.
செகிரிட்டரி.

N. B. எல்லா இடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

திராவிடநாடு

ஞாயிறு] 12—4—42 [காஞ்சி.

திரிசூலம் தயார்!

வால்கா நதிக்கரையோரத்திலும், ரஷிய களம் பூராவிலும், பனி உருகத்தொடங்கி விட்டது. பனிக்கட்டிக் கல்லறையில் இதுகாறும் கிடந்த ஜெர்மன் பிணங்கள், இப்போது வெளியே தெரியத்தொடங்கியுள்ளன. ஹிட்லரின் கோபக்கனலால் தூரத்தப்பட்டு ரஷிய அக்னிக் குண்டுகளை மார்பில் ஏற்று, பனிக்கட்டியைப் படுக்கையாகக் கொண்டு கீழே உருண்டு மாண்ட ஜெர்மன் போர்வீரர்களின் பிணங்களை, நாஜிப் படையினர் எடுத்து அடக்கம் செய்கின்றனர். கார்காவ், லெனின் கிராட், களங்களிலும் கடும் போர் நடந்தபடி இருக்கிறது. ஜெர்மன் அரண்களைத் துளைத்துக்கொண்டு சிகப்புப் பட்டாளங்கள் பாய்கின்றன.

கிழ்நாட்டுக் களத்திலே, நீல நிறமுள்ள ஜப்பானிய விமானங்கள், கொளும்பு, திரிகோணமலை ஆகிய இலங்கைப் பிரதேசங்களிலும், விசாகப் பட்டினத்திலும், காகிநாடாவிலும், பறந்து, துறைமுகத்தையும், தொழிற் சாலையையும் தாக்கிவிட்டுப்போயின. சென்னைக்கு எந்த நேரத்திலும் குண்டுவீச்சு ஏற்படக்கூடும் என்று தோன்றுகிறது. சென்னையிலிருந்து ஸ்பெஷல் இரயில் வண்டிகள் கிளம்பியபடி உள்ளன. தட்டுமுட்டுச் சாமான்களுடன், தலைவிரிகோலமாக மக்கள், சென்னையைவிட்டுக் கிளம்பிவருவதைக்காணச் சகிக்கவில்லை. போரின் பயங்கரத்தை நேரில்காணும் நிலை நம்நாட்டுக்கு உண்டாகிவிட்டது.

மக்கள் மூலைமூலைக்கு ஓடும்நேரம்! பீதி, பிடரியைப் பிடித்துத்தள்ளும் காலம்.கடல்குமுற, வானம் வீறிட, மக்கள்பதற, இருக்கும் இந்த நேரத்தில், **"ஸ்வராஜ் கிதர்ஹை"** என்று சர். ஸ்டாபோர்ட் கிரிப்ஸைப் பார்த்து, காங்கிரஸ்தலைவர் அபுல்கலாம் அஜாத் கேட்டாராம்! என்னதெளிவு! எவ்வளவு அறிவின் ஒளி!!

சர். ஸ்டாபோர்டு கிரிப்ஸ் என்னபதில் கூறினாரோ நாமறியோம். ஸ்வராஜ்கிதர்ஹை என்ற கேள்விக்கு, நமக்குத்தெரிந்த பதில், ஸ்வராஜ் அந்தர்ஹை! என்பதுதான். மேலே வட்டமிடும், பகைவனின் பயங்கரப் பறவைகள் விரட்டப்பட்டாலொழிய, ஜப்பானும் ஜெர்மனியும் தோற்கடிக்கப் பட்டாலொழிய, தலைமீது தாண்டவமாடும் ஆபத்து அழிந்தொழிந்தாலொழிய, **ஸ்வராஜ்** ஏது!

கொந்தளிக்கும் கடல், இடியும் மின்னலும் மிகுந்த வானம், உக்கிரமாக உருளும்அலைகள், துடுக்குத்தனத்துடன் தாக்கவரும் திமிங்கிலம், இவற்றைக் கடந்துசெல்ல வேண்டிய கப்பலுக்கோ, பழய பாய்மரம்! அதிலுள்ள கலஞ்செலுத்துவோரிடையே கலகம்!! இதுதான் இன்றைய இந்தியா!

இதுகாலை, அரசியல் சீர்திருத்தம்பற்றிய பேரம் எதற்கு? என்று கேட்கிறோம். நாட்டுக்குக் காங்கிரசாரே முடிசூட்டிக்கொண்டாலும், போரின் விளைவிலோ, போக்கிலோ, என்ன அற்புதமான மாறுதல் ஏற்பட்டுவிடமுடியும். காங்கிரசார், டாங்கியும் பீரங்கியும், டார்ப்பிடோவும் சப்மெரைனும், துப்பாக்கியும் வேட்டும், விமானங்களும் பிறவும், கேட்கவேண்டிய நேரத்தில், வைசிராய் நிர்வாக சபையிலே இடமும், மாகாணசர்க்காரிலே பதவியும், ஏட்டு சாசனமும் காட்டு ராஜாபட்டமும் வேண்டுமென்று வாதாடுகிறார்களே, இது யோக்கியமான காரியந்தானா! நாட்டுக்குத்தேவைதானா! காங்கிரசார் ஆட்சிசெய்யத் தொடங்கினால், ஜப்பானியக்கப்பல்கள் கரைதட்டிவிடுமோ, விமானங்கள் விறைத்துப்போகுமா, வேட்டு பாட்டாகிவிடுமா, என்ன நடந்துவிடும்! காங்கிரசார், பட்டாளத்துவீரர்களா, படைபலம் தெரிந்தவர்களா? பதவிப்பந்தியில் முதல் இடம் பெறுவதிலே பக்காசமர்த்தர்கள், சமர் சமயத்தில், என்ன செய்யமுடியும்.? ஏன், பதைக்கிறார்கள் பதவிக்காக. சுதந்திரச்சீனாவில் மார்ஷல் சியாங்-கே-ஷெக், தமது படைகளுக்கு ஒரு அமெரிக்கரைத்தலைவராக்கினார். மற்றொர் அமெரிக்கர், ஆஸ்திரேலியப்படைக்குத் தலைமை பூண்டுவிட்டார். இங்கனம் போர் காரணமாக, உரிமைகளையும் விட்டுக்கொடுத்து, உரமானதிட்டம் வகுக்கமற்றைய நாடுகள் முன்வந்துள்ள நேரத்திலே, இந்தியாவிலுள்ள போர் எதிர்ப்பாளர்கள், அஹிம்சாவாதிகள், தக்ளிதாதர்கள், போர் சமயத்தில், பாதுகாப்பு மந்திரிவேலையைக் கேட்கிறார்களே, இதனை என்னென்பது! கேளாக்காதனுக்குக் கீதம் எதுக்கு! முடவன், முண்டா தட்டிப்பயன் என்ன? கருமியிடம் காசுப்பெட்டியைத் தந்து பயன் என்ன? அதுபோல், காங்கரசாரிடம், போரேகூடாது என்று போதித்து வந்தவர்களிடம், பாதுகாப்புப் பொறுப்பைத்தருவது பொருந்துமா! பாதுகாப்புப்பொறுப்பு, படைப்பயிற்சியும், போர் ஆர்வமுங்கொண்டவரிடம் தரவேண்டும்! அஃதே முறை!

போரின் போக்கு எங்கனம் புதிய முறைகள் பழய முறைகளை முறியடிப்பதைக் காட்டுகிறதோ அதுபோல், அரசியல் துறையிலும், ராஜதந்திரத் துறையிலுங்கூட, பிரிட்டிஷார் பழய முறைகளைக் கையாள்வது பயனற்றதென்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

போதிய விமானபலம் இல்லாததால், **பிரின்ஸ ஆப் வேல்ஸ்** எனும் பிரம்மாண்டமான போர்க்கப்பல் மூழ்கடிக்கப்பட முடிந்தது. அதுபோல், இங்கு பிரிட்டிஷார், காங்கிரசை ஒருபெரிய பிரின்ஸ் ஆப் வேல்சாக நம்பிக்கொண்டுள்ளனர். அதை நம்பி லீக், திராவிடர் கட்சி ஆகிய விமானபலத்தை அலட்சியம் செய்யவும், துணிவரேல், "மலாய் கடலில் போர்முறையின் கோளாறு கண்டோம், இந்திய மண்ணில், நமது ராஜதந்திரக் கோளாறைக் கண்டோம்," என்று ஓர்நாள் கண்ணீர் விட வேண்டிநேரிடும் என்று பிரிட்டிஷாருக்கு எச்சரிக்கை விடுக்க விரும்புகிறோம். நாம் பேரம் பேசும் பேன்தக்கூட்டமல்ல! நமது பாதுகாப்புக்காக பிரிட்டனை ஆதரித்தே தீரவேண்டும் என்று கிரிப்சு கள் கிளம்பாமுன்னம் தீர்மானித்து, பணிபுரியும் கட்சியினராவோம். எனவே நாம் குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கும் கூட்டமான காங்கிரசைப்போல், காலையில் ஒன்று, மாலையில், ஒன்று பேசிக்கொண்டிரோம்.

இன்றைய இடரைப் போக்க, நாட்டுக் கட்சிகள் பலவும் ஒன்றுகூடி பணியாற்றும் திட்டம் வகுக்கட்டும், எதிர்கால விஷயமாக, இதுபோது, காங்கிரசிடம் பிரிட்டிஷார் ஏற்பாடு செய்துகொண்டால், அது, நம்மைக் கட்டுப்படுத்தாது என்போம். சேம்பர்லெயின் செய்துவைத்த ம்யூனிச், ஐரோப்பாவில் நிலைக்கவில்லை. இந்திய ம்யூனிச்மட்டும் எப்படி நிலைக்கமுடியும்.

லீகின் தலைவரும், திராவிடத்தலைவரும் இது விஷயத்தைத் தெளிவாக பிரிட்டிஷாருக்குத் தெரிவித்து விட்டனர்.

காங்கிரசாரை, ஜாலியன் வாலாக் கொடுமையால் பிரிட்டிஷார் மிரட்டுவர், பின்னர் பதவி விநியோகத்தால், மயக்குவர்! அதுபோலவே காங்கிரசாரும் உப்புச் சத்தியாக்கிரகத்தால் ஊரில் கலகங் கிளப்புவர், ஊராள்வோனின் உரசல் கிடைத்ததும், குழைவர். இது இந்த இருவரின் இயல்புகள்! காலம் தவிரவேறு மருந்து கிடையாது இவர்களின் நோயைத்தீர்க்க. பேரறிஞர் **பர்க்** அவர்களின் போதனை, பிரிட்டிஷ்செவி புகுந்ததா, அமெரிக்க பிரிட்டிஷ் அமளியின் போது! இன்றைய முதலமைச்சர் சர்ச்சில் பத்தாண்டுகளாகக் கூறிவந்தஎச்சரிக்கை சேம்பர்லெயினின்செவிபுகுந்ததா! அமெரிக்காவை இழந்து அறிவைப்பெற்றனர், அமளி ஐரோப்பாவில் கிளம்பிய பிறகு சர்ச்சிலின் எச்சரிக்கையை முன்பே கவனியாமற்போனோமே என்று இன்று யோசிக்கின்றனர். நெப்போலியன் பிரிட்டிஷ் இனத்தவர் வியாபார விற்பனர்கள் என்றுரைத்தார். அதுவுந்தவறு! சிலசமயங்களில், அவர்கள் மின்னுவதைப் பொன்னெனக் கொண்டு ஏமாறுகின்றனர்!! எனவே, காங்கிரசை அவர்கள் மலை என நம்பினாலும் நம்புவர், பிரான்சுநாடு, மாகினாட் அரணைநம்பி, பிறகு மல்லாந்து வீழ்ந்ததுபோல் இந்திய அரசியலில் காங்கிரசை நம்பி பிரிட்டிஷார் மற்றவர்களை மனமெறியச் செய்துவிட்டு மணம் முடித்துக்கொண்டால், மங்களமுண்டாகாது என்பது இருவருக்கும் நினைவிலிருக்கட்டும். போரின் முடிவு எப்படியேனுமாகட்டும், நமது பேரம் முடியட்டும் என்று காங்கிரஸ் கருதுமோ என்று பிரிட்டன் எண்ணிக்கொண்டு எதிர்காலத்தைக் காங்கிரசிடம் அடகுவைக்கத் துணியுமானால், பிறகட்சிகள் எதிர்காலத்தை நாம் சித்தரித்துக்கொள்ள எத்தனையோ வழிகளுண்டு என்ற உறுதியை வளர்த்துக் கொள்ளவேண்டியே வரும்!

அதிகாரம் வகிக்கும் ஆவலை இவ்வளவு அதிகமாகக் காங்கிரசார், நாட்டுக்கு ஆபத்து சூழ்ந்திருக்கும் இந்த நேரத்தில் கொண்டிருப்பதற்குக் காரணம் பொறுப்பான பதவிக்கு வந்ததும், போர்விரிந்து பரந்துவிடும் நேரமாகப் பார்த்து, எதிரிக்குத் தூதுவிட்டு, "பூர்ண கும்பம் தயார்! பூசுரர் தயார்! புளகாங்கித மடைய கருவிகள் பலப்பல தயார்! வருக! வருக! ஆள்வோர், ஆதிசேஷசயனனான மஹா விஷ்ணுவின் அவதாரம் என்பது எமது வேத வேக்கு. வருக!" என்று எதிரியை வரவேற்கவோ, என்று நாம் உள்ளபடி அஞ்சுகிறோம்.

சுதந்திர தாகமும்சொல்லொணாவீரமும் படைத்த காங்கிரசாரா அப்படிச் செய்வர் என்று சாவடிச்சூரர்கள் கேட்பர்! வெர்டூன் வீரர் என்று வல்லரசர்கள் புகழ்ந்த பெட்டெயின், ஸ்பெயின் நாட்டிலிருந்து, பிரான்சுக்கு நெருக்கடியான நேரத்திலே வரவழைக்கப்பட்டபோது, அவரிடம் ஆட்சி ஒப்படைக்கப்பட்ட போது, இனி பிரான்ஸ் நிமிர்ந்துநிற்கும், ஜெர்மன் சைன்யங்களைக் கடந்த சண்டையின்போது முறியடித்த வீராதிவீரர் வந்துவிட்டார்" என்று பிரசாரம் செய்யப்பட்டது. வந்தவயோதிகர் செய்தது என்ன? வந்தார், பணிந்தார்! வாகை சூடுவார் என்றுவரவழைத்தனர், அவரோவலை அணிந்தார்! அஞ்சா நெஞ்சுடன் போர் புரிவார் என்று நம்பினர், அவர் அடிமை முறிச்சீட்டில் கையொப்ப மிட்டார். அதுபோல், இங்கு நடக்கவா, காங்கிரசை நாடாள அழைக்கிறார்கள் என்றுநாம் கேட்கிறோம்.

நடப்பது நடக்கட்டும், நாமார்க்குங்குடியல்லோம்! போர் முடியட்டும், முடிவு நேசநாடுகளின் வெற்றியாகத் தான் இருக்குமென்பதே நமது நம்பிக்கை—ஆம்! ரங்கூன் வீழ்ச்சிக்குப் பிறகுந்தான்!! பிறகு, இங்கு நாம் "விட்ட இடத்திலிருந்து தொடங்க" வெகுநேரமாகாது! போரின் முடிவு, விபரீதமாகுமேயானால் என்னாவது என்று குதர்க்க வாதி கேட்கக்கூடும். ஸ்வராஜ்கிதர்ஹை! என்று அன்றுகேட்கக் காங்கிரஸ் இருக்குமா என்று திருப்பிக்கேட்பது மட்டுமல்ல நமது பதில், நமதுகோரிக்கை ஈடேறும்வரை போரிடுவதுதான் நமது கடமை, அதை எதுவும் மாற்றாது. மக்கள் கல்லறைபுகுவர், கருத்துகள் புகா!

விமானக்குண்டு வீச்சுக்கும், எதிரியின் வேட்டுக்கும் இரையானதுபோக மிச்சமிருக்கும் தமிழர், "எங்கே அன்று கேட்ட திராவிட நாடு" என்று கேட்க மறக்கமாட்டார்கள். திராவிட இனஎழுச்சியை, இடைக்கால இடரோ, எதிர்கால ஏற்பாடுகள் எவையுமோ அழித்துவிட முடியாது! என்போம்.

சர். கிரிப்சைக்கண்டு பேசியபிறகு, **பெரியார்,** **ஜனாப் ஜின்னா. டாக்டர் அம்பேத்கார்** ஆகியமூவரும், எது எப்படியிருப்பினும், மூவருங் கூட்டாகஇருந்து பணியாற்றுவது என்ற முடிவுக்கு வந்தனரென்று தெரிகிறது. அந்த திரிசூலம், மிக வன்மைவாய்ந்தது என்பதை மாற்றார்கள், அதன் கூர்மை நெஞ்சைக்குத்தி, ஆணவமென்ற இரத்தத்தை வெளியே விழச்செய்து அவர்கள் தமது சூதெனும் சவத்தைக் கீழே சாய்க்கும் அந்தநேரத்தில் உணர்வர்! பெட்டெயின்களுக்கு பிரிட்டிஷார் அழைப்புவிடட்டும் அன்றி, விவேகம் பெற்று வேறு ஏற்பாடு செய்யட்டும். நமக்கு அதுபற்றிக்கவலையில்லை. நமது திரிசூலம்தயாராகிவிட்டால், போதும், திக்கெட்டும் வெற்றிபெறுவோம் என்பது திண்ணம்!.

உருவிய உடைவாளை ஏந்திய தொண்டர் படையினர் முன்வர, ஜனாப்ஜின்னா ஏப்ரல் 3ந்தேதி இரவு 9-40க்கு, அலகாபாத்திற் கூடிய லீக் மாநாட்டுக்குள் நுழைந்தார்! பாகிஸ்தான் மாளிகைக்குள் அவர் அதுபோல் நுழையும்போது, மரியாதைக்குண்டுகள் வெளியேகிளம்பும்! கொரான் வாக்கியங்கள் மசூதிகளிற் கிளம்பும்! குதூகலம் பாகிஸ்தானிலும் திராவிட நாட்டிலும் தாண்டவமாடும்!

இது வெறுங்கனவல்ல! ஒருபட்டாக்கத்தி அந்த மாநாட்டில் 31 ஆயிர ரூபாய்க்கு ஏலம்விடப்பட்டது!! எவ்வளவு ஆர்வம் இருந்திருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள். அதுமட்டுமா!

"நமது இலட்சியம் பாகிஸ்தான்தான்! அவர்கள் (பிரிட்டிஷார்) தான் பாகிஸ்தானைத் தரவேண்டுமென்பதில்லை. நாம் அதனை எடுத்துக்கொள்ளப்போகிறோம். இப்போது இந்தியாவெங்கும் பாகிஸ்தான் ஜிந்தாபாத் என்ற கூச்சலே கேட்கிறது. இதுதான் நமது முடிவு. இதைஒருவரும் மாற்றுவதற்கில்லை" இது அன்று ஜனாப் ஜின்னா பேசிய வீரமொழிகள்!

சென்னையிலே அவர், "பாகிஸ்தானை நீங்கள் பிரித்துத்தரப்போகிறீர்களா, வேறுயாரேனும் வந்து பிரித்துக்கொடுக்கும் வரை காத்துக்கொண்டிருக்கப் போகிறீர்களா?" என்று கேட்டார் பிரிட்டிஷாரை!

அலகாபாத்தில், "பாகிஸ்தானை அவர்கள் (பிரிட்டிஷார்)தான் தரவேண்டும் என்பதில்லை. அதை நாம் எடுத்துக்கொள்ளப் போகிறோம்" என்று கூறிவிட்டார். உணருங்கள் அந்த உறுதியின் பொருளை!

ரோமாபுரி ராணி, (5ம் பக்கத் தொடர்ச்சி.)

என்று துணிந்து நடந்தவள்! அகஸ்டசின் தர்பாரிலே, மண்டலாதிபதிகள் கப்பங்கட்டி, கட்டியங்கூறி நிற்பர், வீரர்கள் விருதி கூறுவர், கவிவாணர்கள் புகழ்பாடி நிற்பர், அகஸ்டசுக்கு. ஆனால் இவர்கள் யாவரும், ஜூலியாவிடம் தமது மனதைக்காணிக்கையாகக் கொடுத்துவிடுவர்! ஜூலியாவோ, யாருக்கும் கடாட்சிக்கும் இயல்பினள்! விபசார வள்ளல்!!

சிறுவயதிலேயே சீமானொருவனை அவள் மணஞ்செய்து கொள்ளும்படி, அகஸ்டஸ் ஏற்பாடு செய்தான். நற்குணவானொருவனை மணந்துகொண்டு, அவளோர் மங்கையர்க்கரசியாகினாளா! இல்லை! தனது கணவன், **மார்செலசிடம்**, அவள் தனது மனதை ஒப்படைக்கவில்லை! உடலைப்பற்றியோ அவள் பொருட்படுத்தும் வழக்கமில்லை!!

ரோம் நகரெங்கும் திருவிழா! வாணவேடிக்கை! பந்தயங்கள்! பரிவார ஆரவாரம்! பாடல்! ஆடல்! விருந்து! கேளிக்கை! எல்லாம் ஜூலியாவின் திருமணவைபவத்துக்காகவே. இவைகள் ஜூலியாவுக்குத் தித்திக்கவில்லை. கரும்புத்தோட்டத்திலே கரிபுகுவது போல், ஆடவர் கூட்டத்திலே ஜூலியா புகுந்து அழிக்கத் தலைப்பட்டாள்! மார்செலஸ்குரூபியல்ல! கோணல் நடத்தைக்காரனுமல்ல. பெருங்குடிபிறந்தோன், பெருமை பெற்றோன், அகஸ்டசின் அபிமானத்தை அதிகமாகப் பெற்றவன். எதிர்காலத்தில் ஏந்தலாகவரும் பாக்கியசாலி என்று எவரும் புகழ்ந்தனர். இவையேதும், ஜூலியாவின் மனதைத்திருப்தி செய்யவில்லை. அவள் தனது இயல்பை மாற்றிக்கொள்ளவில்லை. அது அவளது அழகும், வயதும் வளர வளர, சுடர்விட்டு எறியலாயிற்று.

இதற்குள், அகஸ்டசைக் கலியாணம் செய்துகொண்ட லிவியா, மார்செலஸ், இருக்கும்போது தன் மகனுக்குப் பட்டம் கிட்டாதென்று கருதினாள்! மார்செலஸும் மாண்டான்! கொல்லப்பட்டான்! ஆனால் ருஜூ ஏதுங்கிடையாது. வெளியே பேசவும் முடியாது, லிவியாவின் செல்வாக்கு உச்சநிலையில் இருந்த நேரம்அது. மார்செலஸ் 24-வயது வீரன். அவன் இறந்ததைக் கண்ட ஜூலியா, கணவன் என்ற விலங்கு கத்தரிக்கப்பட்டு விட்டது என்று களித்தாள். "கூப்பிடு தோழர்களை" என்றாள். சேடியர் ஓடிச்சென்று சிங்கார புருடர்களை மந்தை மந்தையாக ஓட்டிவந்தனர். யார்மனமும் நோகாவண்ணம், வேண்டினோர்க்கெல்லாம் வரந்தந்தாள், ஜூலியா! இரவுகளில், ரோம்நகர வீதிகளில், காதலர்களுடன் விளையாடிக் கொண்டும், சிரித்துக் குலுக்கி நடந்துகொண்டும் பொழுது போக்குவாள்! கூச்சம், மறைப்பு, திரையிடுதல், முதலியன ஜூலியாவுக்குக் கிடையாது. கேலிசெய்வரே, கண்டிப்பரே என்ற கவலை கிடையாது. அகஸ்டசின் கோபத்தைப் பெறுவோமே என்றும் அவள் அஞ்சவில்லை! அவ்வளவு காமச்சேட்டைக் காரியானாள்! ரோம் நகரெங்கும் அவளைப்பற்றிய கேலிதான்! அவள் காதில் படும்படியும்பேசுவர், அவளோ, கண்சிமிட்டிக்கைகொடுத்து, சபாஷ் என்பாள். அகஸ்டசின் வீரம், லிவியாவின் சாகசம், ஜூலியாவின் காமாந்தகாரம் இம்மூன்றும், ரோம்நகரப் பாடலுக்கு, பல்லவி, அனுபல்லவி, சரணம்!

மீண்டும் ஜூலியாவுக்குத் திருமணம் நடந்தது. இம்முறை **அக்ரிப்பா** என்பான் மாலையிட்டான். அந்த மாலை கழுத்திலிருக்கையிலேயே, ஜூலியாவின் கண்ணும் கருத்தும் வழக்கமான இடங்களில் உலவின. சிலகாலஞ்சென்றபின், ஜூலியாவை மணஞ்செய்துகொண்ட அக்ரிப்பா, இறந்தான். துக்கங்காக்கும் சடங்கு சிலதினம்! பிறகு பழயபடி பாட்டுச் சுவை மொழியாள், பஞ்சணைப் போருக்கு ஆயுத்தமானாள். ஊரார் கேலிசெய்தனர்! உரக்கச் சிரித்து, "உல்லாசத்தைத் தடுக்க இவர்கள்யார்?" என்று கூறிவிட்டு, வாடிக்கைக்காரரை மகிழ்வித்து வந்தாள், வல்லரசர் பலரை வணங்கவைத்த அகஸ்டசின் மகள்!

சிலகாலம் சென்றதும், லிவியாவின், முதல் புருடனுக்குப் பிறந்த **டைபீரியஸ்**, ஜூலியாவைக் கலியாணம் செய்துகொண்டான். இது வெறும் அரசியலுக்காக நடந்த சம்பந்தமே யொழிய, அணுவளவு அன்பேனும், இருவருக்குமிடையே இருந்து சம்பந்தத்தை ஏற்படுத்தவில்லை. டைபீரியசை, ஜூலியா கேவலமாக மதித்தாள். ஜூலியாவைப்பற்றித் துளியும் கவலைகொள்ள மறுத்தான் டைபீரியஸ். ஜூலியாவின் நண்பர்கள், இந்த சம்பந்தத்தைப்பற்றிச் சஞ்சலப் படவில்லை! செனட்மெம்பர்கள், தளபதிகள், புலவர்கள் பூமான்கள், நடிகர், பாடகர், நாவலர், முதலிய பலப்பல ரகங்கள், ஜூலியாவின் ஆசை நாயகர்கள்! கண்டவுடன் கனியும் முகத்தினள், தொட்டதும் துவளும் மனத்தினள், துதித்ததும் அருளும் இயல்பினள் ஜூலியா. எனவே அவளது அன்புக்குப் பாத்திரமானவர்கள் அனேகர்!

டைபீரியஸ் இந்தக் கண்றாவியைக் காணச்சகியாமல், ரோம் நகரை விட்டு நீங்கி, **ரோட்ஸ்** என்ற பிரதேசத்தில் தங்கிவந்தான்.

மகளின் மந்தகாசத்தால், மாநகர் கூட்டமெனும் மந்தை ரோமில் பெருகும் செய்திகேட்ட ஆகஸ்டஸ், சினந்தான், கண்ணீர் சிந்தினான், கைகளைப் பிசைந்துகொண்டான், தலையில் அடித்துக்கொண்டான். என் செய்வது! ஜூலியாவைக் கொன்றுபோட நினைத்தான்! அவளால் தனக்கு ஏற்பட்ட அவமானம், அவனை, வயோதிகத்தைவிட அதிகமாக வாட்டத் தொடங்கிற்று. "விபசாரி அவளை இனிதொலைத்தே தீருவேன்" என்று அகஸ்டஸ் கடுங்கோபத்துடன் கூறி, ஜூலியாவை **பாண்டா டேரியா** என்ற தீவுக்கு, அனுப்பி, அங்கேயே காவலில் வைத்துவிட்டான். அவளது காதலுக்காக வேட்டையாடிய பேர்வழிகளைப் பிடித்திழுத்துத் தண்டித்தான். டைபீரியஸ், ஜூலியாவை இங்ஙனம் செய்தது முறையல்ல, என்று அகஸ்டசுக்குக் கடிதம் எழுதினான்! அதுவெறும் பாசாங்கு! துஷ்டை தொலைந்தால்போது மென்பதுதான் அவன் எண்ணம். இதற்கிடையே, ஜூலியாவின் அபிமானிகள், அவளைச் சிறைமீட்கக் கருதினர். அகஸ்டசை வேண்டினர். அகஸ்டஸ் அசையவில்லை. ஜூலியாவை **ரெஜியம்** என்ற வேறோர் இடத்திற்கு அனுப்பிவைத்துவிட்டான். டைபீரியசுக்கும் ஜூலியாவுக்கும் நடந்த திருமணத்தை ரத்து செய்துவிட்டான். ஜூலியா தகப்பனின் கோபத்தால் தாக்கப்பட்டு, துவண்டுபோனாள். அகஸ்டஸ் இறந்தபிறகு, டைபீரியஸ் அதிகாரத்திற்கு வந்தான். வந்ததும் ஜூலியாவை அவள் வீட்டிலேயே சிறையிட்டான். பஞ்சையாய், பராரியாய், பழிப்புக்கும் இகழ்ச்சிக்கும் இலக்காய், உண்ண உணவின்றி, ஊராண்டவனின் குமாரி, மடிந்தாள். உலகம் போற்றும் உயர்தர வீரர் அகஸ்டசின், குடும்பப் புகழின் கரை, மறைந்ததுபற்றி மனவருத்தப்பட்டவர் எவருமில்லை! தொலைந்தாள் ஜூலியா என்றே பலரும் களித்தனர்!

"பாகிஸ்தான் போர்"

ஆசிரியர்:— பொள்ளாச்சி P. K. பாப் சாஹிப்

• "**பாகிஸ்தான் போர்**" என்ற புத்தகம் நமதுபார்வைக்கு அனுப்பப்பட்டது. விஷயமும் ஆசிரியரும் நமக்கும் தமிழர் யாவர்க்கும் வேண்டியவர்கள்! இனிய எளிய தமிழில், குதர்க்க வாதிகளின் குறும்பை அடக்கும் முறையில் பாகிஸ்தான், திராவிடஸ்தான் பிரச்னை விளக்கப்பட்டிருக்கிறது. தமிழர், இதனை ஆதரிக்கவேண்டுகிறோம். இந்நூலின் ஆசிரியர். இஸ்லாத்துக்காகவும், முஸ்லீம் லீகுக்காகவும், தமிழர் விடுதலைக்காகவும் உழைக்கும் இளவீரர். இவரது முயற்சியை நாம் பெரிதும் பாராட்டுகிறோம்.

கிடைக்குமிடம்:— P. K. கான்சாகிப். S. P. S. கம்பெனி, ஒப்பணக்காரத்தெரு கோயம்புத்தூர்.

விலை 0—6—0.

தமிழர் இயக்கமும் தமிழர் படையும்

பண்டிட் S. S. ஆனந்தம்.

மக்கள் எல்லோரும் கல்வியையும் நல்லொழுக்கத்தையும் பொதுவாகப் பேணக் கடமைப்பட்டவர்களே எனினும் அக்கல்வியும், ஒழுக்கமும் அமைதற்குக் கருவியாகிய மொழிகளும் நாகரிகங்களும் வெவ்வேருக இருப்பதால் அவ்வம் மொழிக்கும் நாகரிகத்திற்கும் உரியவர்கள் அவற்றைப் பாதுகாப்பதற்காக ஒன்று கூடுதல் இயற்கையும் இன்றியமையாததும் ஆகும்.

இயக்கங்களின் தேவை.

அவற்றை ஆராய்ந்து அவற்றின் உண்மைத்தன்மைகளை அறிவதற்கும் அத்தகைய இயக்கங்களும் சங்கங்களும் அவசியமானதே. இந்நாட்டின் எதிர்கால அரசியலும் அவற்றை ஒட்டியே நிகழக்கூடுமாதலின் அவைகள் இந்நாட்டிற்கு மிக இன்றியமையாதனவாகும். ஒரு நாட்டிலுள்ளோர் தொழில் வேறுபாடு, பொய்யான குல வேறுபாடு பற்றி மருத்துவ சங்கம், நாடார் சங்கம், முதலிய பலவகைச் சங்கங்கள் அமைத்துக்கொள்வதுபோல்மொழி நாகரிக வேறுபாடுபற்றி இந்நாட்டில் வெவ்வேறு இயக்கங்கள் தோன்றுவது பொருத்தமானதே. எல்லோருக்கும் பொதுவான கொள்கைகளில் எல்லாரும் ஒத்துப்போதலும், சிறப்பான கொள்கைகளில் அவற்றைப் பாதுகாத்தற்பொருட்டு வேறுபடுதலும் இயற்கையே. சிறப்புக் கொள்கையை அறவே ஒழித்தல் மனித இயற்கைக்கு மாருனதாகும், சிறப்புக்கொள்கையைப்பற்றிப் பிணக்கும் கலகமும் வாராதபடி அரசியல் நடைபெற வேண்டும். ஒருவகையான சிறப்புக்கொள்கையைப் பேணுகின்றவர்கள் அரசியல் ஆதிக்கம் பெற்ருல் அவர்கள் பிற சிறப்புக்கொள்கைகளைத் தங்கள் அதிகார வலியாலும் சூழ்ச்சித் திறமையாலும், ஒழித்துவிடக் கருதல் பொருத்தமற்ற செயலாகும். அது உள்நாட்டுக் கலகத்தை மூட்டிவிடுவதாகும்.

கட்டாயம் ஒழியவேண்டும்.

ஒரு மொழியிலுள்ள சிறந்த நூல்களே அம்மொழி பேசுபவரது நாகரிகத்தை உணர்த்துதலின் மொழி என்ற சொல்லையே மொழி, கலை, நாகரிகம், என்பவற்றைக் குறிப்பதற்குப் பயன்படுத்தலாம். ஆந்திர தெலுங்குமொழி பேசுகின்றவர்கள் தங்கள் நாடு தனியாகப் பிரிக்கப்படவேண்டுமெனவும், தங்கள் அரசியல் அமைப்பு வேருக இருத்தல் வேண்டுமென்றும் வாதாடினுல் அவர்கள் கொள்கைப்படி அவர்கள் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள இடங்கொடுத்தலே பொருத்தமாகும். அவர்கள் கொள்கை தவறென்றும், அவர்கள் நோக்கம் பிழைபட்டதென்றும், அவர்களுக்கு அறிவுறுத்த முயலுதல் மனமாற்றத்திற்கும் உலகியலுக்கும் நடவாமைக்கும் ஏதுவாகும். அவர்கள் அரசியல் அமைப்பில் பொறுப்பாட்சி இருத்தல் வேண்டுமென்பதே கருதத்தக்கது. அதுவே பொதுக் கொள்கை. பிறவற்றைக்கட்டாயப்படுத்துதல் பெரும் பயன்தராது. கட்டாயமென்பது விலக்கப்படவேண்டும். மொழிக்கொள்கையிலும் கட்டாயமென்பது ஒழிக்கப்படுதல் வேண்டும். தாய்மொழி ஒன்றே கட்டாயத்துக்குரியது. பிறமொழிகளைக் கட்டாயப்படுத்துதல் இயற்கைக்கு மாருகும். தாய்மொழியைப் பார்க்கிலும் பிற மொழியைப் பேணுதல் அவசியம் என்பது தவறு. தாய்மொழிக்கட்டாயப் பாடமாகக்கல்லூரிகளில் இல்லாத போது பிறமொழியைக்கட்டாயப் பாடமாக வற்புறுத்துதல் பெருந்தவறு. இந்நாட்டில் தமிழர்மொழியும், தமிழர் நாகரிகமும் வேறென்பர் ஒரு சாரார். பின்னையோர் தங்கள்கருத்தை அறிவு ஆராய்சி முறையில் முன்னையோர் மனத்தி பதிப்பிக்க முயலுதலே பொருத்தமாகும். அவ்வாறன்றித் தங்கள் கொள்கையைக் கட்டாயத்தாலும், சூழ்ச்சியாலும் பின்னையோரைப்பின் பற்றும்படி வற்புறுத்துதல் நிலைத்த பயன் தரமாட்டாது. மனமாற்றத்திற்கே அது ஏதுவாகும். தமிழ் மக்களாய்ப்பிறந்தோர் தமிழ்க்கொள்கையை நன்ருகத்தழுவி ஆராயற்பாலர். அவர்கள் தமிழ்க் கொள்கையை நன்ருய் ஆராய்ந்து பின்னர் ஆரியக் கொள்கையையும் நன்ருய் ஆராய்ந்துபின்னர் ஆரியக் கொள்கையே உண்மையாகத் தோற்றுமாளுல் அதனைக் கடைபிடித்துக் கொள்ளலாம். (தொடரும்)

தமஸ்தாவின் பெண்தான்! 10-ம் பக்கத்தொடர்ச்சி.

சோமு: நீ வக்கீல் போல் பேசுகிருய். நீமட்டும் வக்கீல் வேலைக்குப் படித்திருந்தால்.

இராகவன்: கிழிந்த கருப்புச் சட்டையுடன் வெளியே கிளம்பி யிருப்பேன் . வேறென்ன நடந்திருக்கும்!

சோமு: நீ சத்விஷயங்களைப் படிக்க வேண்டும்.

இராகவன்: அருமையான புத்தகத்தைப் படித்துக் கொண்டே இருக்கிறேன். உலகத்தை விட உன்னதமான புத்தகம் இருக்கிறதா அண்ணு! அதை நான் படித்துக் கொண்டு தான் இருக்கிறேன்.

இந்தச்சம்பாஷனைக்குப்பிறகு, சோமு மௌனமாக இருந்துவிட்டுப் போய்விட்டார். நான் இராகவனைத்திட்டினேன், நல்லவர்கள் மனதை நோகச் செய்வது அழகல்ல என்றேன். நான் இவ்விதம் இராகவனுக்குப் புத்திசொன்னதேயில்லை. அன்று அவனது பேச்சு சோமுவின் முகவிலாசத்தையே மாற்றிவிட்டதைக்கண்டேன். ஆகவே எனக்குக் கோபம் பிறந்தது. இராகவன் என்னை ஏற இறங்கப்பார்த்துவிட்டுச் சிரித்தான். "அந்தச் சிரிப்பின் அர்த்தம் என்ன?" என்று நான் சீறினேன்.

"எண்ணுத எண்ணமெல்லாம்
எண்ணி எண்ணி
எட்டாத கோட்டைக்கு
ஏணியிட்டு "என்று இராகவன் பாடிக்

கொண்டே சிரித்தான்.

எனக்குச் சோமுமீது இருக்கும் எண்ணத்தை இராகவன் எப்படியோ தெரிந்து கொண்டான் என்பது தெரிந்தது. நான் நாணத்தால் தலைகுனிந்தேன். "அழகுக்குத்தக்க யோகம் அடிக்கவேண்டும்" என்று குறும்புப்பேச்சு ஆரம்பித்தான் இராகவன்.

புன்சிரிப்புடன் நான் இராகவனை முறைத்துப் பார்த்தேன்! "இந்தப்பார்வைக்கே அவன் உன்னைத் தன் பட்டமகிஷியாக்கிக் கொள்ளலாம்" என்று இராகவன் கூறினன்.

"இராகவா! வம்புந்தும்பும் பேசாதே" என்று நான் கூறினேன். இராகவன் அதைக்காதில் போட்டுக்கொள்ளாமலே, "உனது அழகைக்கண்டிருப்பான் அவன். ஆனல் அதற்கேற்ற அந்தஸ்தை உனக்கேற்படுத்த அவன் முன்வருவானு என்பது சந்தேகந்தான்! அவன் ஒரு முட்டாள்!" என்று கூறினுன். இராகவனின் அந்தப்பேச்சு, கேலிசெய்வது போல் தோன்றவில்லை. ஆழ்ந்த கருத்துடன் அவன் அதனைக் கூறினதாகவே தென்பட்டது. அதைக் கூறும்போது, இராகவனின் முகம் வாடியது. என் மனம் ஒரு குலுங்கு குலுங்கிற்று! (தொடரும்.)

தொடர்கதை.

குமஸ்தாவின் பெண்தான்!

அல்லது

கொலைகாரியின் குறிப்புகள்.

சௌமியன்.

[முன்பு: கள்ளபுருடனைக்கொன்று தூக்குத்தண்டனை பெற்ற காந்தாவின் டைரியில், அவளது ஆரம்பக் காதல்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. அவள் காதலித்த சோமசுந்திரம் என்ற இளைஞனின் இயல்புகள் இங்கு காணவும்.]

தம்பிஇராகவன், சோமுவிடம் நெருங்குவதில்லை. காரணம், இராகவனுக்கு நல்லவர்களே பிடிப்பதில்லை. சோமு, எப்படியாவது இராகவனைத் தோழனுக்கிக் கொள்ளவேண்டுமென்று, இராகவன் இருக்கும் நேரத்தில், சில நாட்கள் எங்கள் வீட்டுக்கு வருவதுண்டு, பேசுவதுண்டு. பேச்சு, சுவாரஸ்யமாக இருக்கும். எனக்கு நல்ல விருந்து. ஆனால் இராகவன் கண்டிப்பாய் பேசுவான்.

நான் பாரதத்தில் கோடிட்டு அனுப்பியதற்குச் சில நாட்களுக்குப்பிறகு, இராகவன், ஒரு தினம், களைத்துவந்து, கன்னத்தில் கைவைத்துக்கொண்டு உட்கார்ந்தான். வறுமையினால் வரும் வாட்டம் எனக்கிருப்பதைவிட அவனுக்கு அதிகம். நான் வீட்டிலேயே கிடப்பவள். அவன் வெளியே போய்வருபவன். வறுமையின் கொடுமைகள் அவனுக்கு அதிகமாக உறுத்தலாயின. தனது நண்பர்களின் நாகரிக உடை தனது அழுக்குச்சட்டையைப் பார்த்துப்பரிகாசம் செய்வது போலிருக்கிறது! தானோர் திருஷ்டிபரிகாரம்! சனிஸ்வரூபம்! என்று ஏதேதோ பேசுவான், தன்னைத்தானே நொந்துகொள்வான். வாட்டத்தைக் கொடுத்த வறுமை, இராகவனுக்கு முரட்டுத்தனத்தையும், பணக்காரர் என்றால் ஒரு வெறுப்பையும், நீதி நேர்மை, பாவபுண்ணியம், தர்மம் தயைஎன்று பேசப்படுவதிலே கசப்பையும் கொடுத்துவிட்டது. சதா, கடுகடுத்த முகத்தோடுதான் இருப்பான். "விரசநாயகன் வந்தான்" என்று சாந்தா கேலிசெய்வாள். பேசும்போதே துடுக்குத்தனமாக இருக்கும். அதிலும் பணக்காரர் பேச்சை எடுத்தால் போதும், சீறுவான். மதத்திலே அவனுக்கு நம்பிக்கை கிடையாது. கடவுளைப்பற்றிக்கூடக் கேலிசெய்வான்.

சோமுவிடம் பேசுவது இராகவனுக்கு இஷ்டமில்லை என்ற போதிலும் வீடேறிவந்தவனிடம் எப்படிப்பேசாமலிருப்பதென்று வேண்டாவெறுப்புடன் பேசுவான். சோமு மிக்க வாத்சல்யத்துடன் பேசுவதுடன், மதவிஷயமாக, இராகவனுக்குப் போதிப்பதுண்டு. சில சமயங்களில் இராகவன் அவைகளைக் கேட்டுக்கொள்வான். சில சமயங்களில், "சோமண்ணா! வேறு ஏதாவது பேசுங்கோ, கேட்போம், இந்த இழவு பேச்சு வேண்டாம்" என்று கூறிவிடுவான் "சிவ! சிவ!! இராகவா, அப்படிச்சொல்லாதே, [அபசாரம்" என்பார் சோமு. "அபசாரமாவது கிரகசாரமாவது என்று இராகவன் முரட்டுத்தனமாகக் கூறிவிட்டு வெளியே போய்விடுவான். அப்பா அம்மா, இராகவனிடம் கோபித்துக்கொள்வார்கள், வைவார்கள். நான் மட்டும் கோபிப்பதில்லை. இராகவன், முரட்டுத்தனமுடையவனானதற்கும் வெறுத்துப் பேசுவதற்குங் காரணம், வறுமையின் கொடுமைதான் என்பது எனக்குத்தெரியும். சிற் சில சமயங்களில், இராகவன் தன் மனதைத்திறந்து காட்டுவதுபோல், என்னிடம் பேசுவான். கேட்க மிக உருக்கமாக இருக்கும் அவனது பேச்சு,

ஒரு நாள், சோமுவுக்கும் இராகவனுக்கும் கீழ்க்கண்டபடி பேச்சு நடந்தது.

சோமு: இராகவா! எங்கே உன்னைக் காண்பதே அரிதாகி விட்டது.?

இராகவன்: கழுதை கெட்டால் குட்டிச்சுவரு தானே! சாக்கடைக்குப் போக்கிடமேது? வேலை ஏதாகிலும் கிடைக்குமோ என்று தேடி அலைந்தேன்.

சோமு: கிடைத்ததோ?

இராகவன்: நன்றாகக் கிடைத்தது, டாமிட், இடியட், என்ற அர்ச்சனை. வேலையாவது கிடைப்பதாவது. புலிப்பாலில் குதிரைக் கொம்பைத் தேய்த்து அந்தத்திலகத்தை நெற்றியிலே வைத்துக் கொண்டு வந்தால் கிடைக்குமாம்!

சோமு: காலம் இப்படியே இராது இராகவா! பகவான் க்ருபைசெய்யாமற் போகமாட்டார்.

இராகவன்: அதுசரி அண்ணா! கிருபை பண்ணுவார். ஓய்வு இருந்தால்தானே! தேரும் திருவிழாவும், வேதபாராயணமும், பஜனையும், சத்காலட்சேபமும் பரத நாட்டியமும், அதிர்வெடியும் அக்காரவடசலும், அன்னபிஷேகமும் விடாயத்தியும் அனுபவித்து விட்டு, மிகுந்தநேரத்தில், உம்மைப் போன்ற "பக்தர்" களைக்கண்டு பேசிக் கடாட்சித்து விட்டுப்பிறகு தானே என்னைப் போன்ற பஞ்சையிடம் வருவார். அதற்குள் எனக்கு வேலையே அவசிய மில்லாத நிலைமை வரும். சாவுதான் அவர் எனக்குச் செய்ய வேண்டிய கடாட்சம்.

சோமு: மனம் வெறுத்துப் பேசாதே இராகவா! இது ஒரு கஷ்டமா.? சாட்சாத் ஸ்ரீராமரே காடு சுற்றினர்; கஷ்டமும் சுகமும் இரவும் பகலும் போல மாறி மாறித்தான் வரும். இதற்காகப் பகவத் நிந்தனை செய்வதா?

இராகவன்: நானா நிந்திக்கிறேன்? என்ன அண்ணா! உம்மைப் பெரிய வேதாந்தி என்று கூறுகிறார்களே. நான் பேசுகிறேன், நான் ஏசுகிறேன் என்று சொல்லலாகுமா? நான் ஏது? நீர் ஏது? எல்லாம் அவன் மயம்! எல்லாம் அரன் செயல்! உம்மை இலட்சாதி பதியாக வைத்திருப்பது அவன் செயல்! என்னைப் பிட்சாதி காரியாக வைத்திருப்பதும் அவன் செயல்! மிகநல்ல, அரன்.!

சோமு: இராகவா! நீ நாத்தீகம் பேசுகிறாய். நாக்கு கூசவில்லையா?

இராகவன்: இதற்குப் பெயர் நாஸ்திகமா? எனக்குத் தெரியாது. அவனன்றி ஓர் அணுவும் அசையாது. எனது நாக்கின் அசைவும் அவனது செயல்தான்!

சோமு: பிறுமண குலத்தில் உதித்து இப்படிப் பகவத்து வேஷியாவதா?

இராகவன்: பூர்வ கர்ம பலன்! (9-ம்பக்கம் பார்க்க.)

எனது ஆசிரியரை இழந்தேன்!

(C. N. அண்ணாதுரை எழுதுவது)

தமிழரின் பூந்தோட்டத்தில், மணம்வீசும் மலர்களைத் திடீர் திடீரென, காலமெனும் கள்ளன், பறித்தழிக்கிறான். அந்தோ, மனதை மலரச்செய்யும் மாண்புகள் படைத்த நமது நண்பர்களை நாம் இழக்கும் கொடுமையில் அடிக்கடி சிக்கி அவதியுறுகிறோம். தமிழரின் நறுமணச்சோலை வேலியற்றதோ! ஏதோ, காலக்கள்ளனின் கன்னெஞ்சத்தின் காரணம்! பெறற்கரியவர்களைப்பெற்று, இனி நமக்கென்ன குறை என்று தமிழன் இறுமாந்திருக்கும் வேளையில், ஆரிய நச்சரவம் புற்றில்பதுங்க வில்லையேல் தலைபோகும் என்று பயப்படும் நேரத்தில், எப்படியோ, இடர் நம்மைத் தாக்கி, நமது இன்ப எண்ணங்களை அழித்தொழிக்கிறது. இதனை என்னென்போம்!

திருச்சியில் தோழர் சுந்தர நாடாரைச் சூறையாடிச்சென்ற மரணம், தனது பசி அடங்கப்பெறாமல் சின்னாட்களுக்கு முன்பு சிரித்த முகத்தழகன், சீர்மிகு குணக்குன்று, பொறுமையின் இருப்பிடம், பொன்னான பண்புகளின் தங்குமிடம், மாணவர்களின் மனதை மயக்கி, அன்பால் பிணைக்கும் அருங்குண அண்ணல், தோழர் திருவேங்கிடசாமியையும் திருடிக் கொண்டு போய்விட்டது. திடுக்கிட்டேன் செய்தி கேட்டு. நீர்சுரக்கும் கண்களுடன் இங்குமங்கும் நோக்கினேன், ஏதேதோ எண்ணினேன், என்செய்வேன், இன்னமும், குழம்பிய சிந்தையில் தெளிவு ஏற்படவில்லை, கசங்கியகண்கள் பழையநிலைபெறவில்லை, துடித்த நெஞ்சு துடித்தபடி இருக்கிறது.

தோழர் திருவேங்கிடசாமி அவர்கள், எனக்கு இண்டர்மீடியேட் வகுப்பில் ஆங்கில ஆசிரியர்! ஆனால் அன்றுமுதல், நேற்றுவரை அவர், எனக்கு, வாழ்க்கையின் பல துறைகளுக்கும் ஆசிரியராக இருந்து வந்தார். நான் அவரிடம் வகுப்பிலேகற்ற பாடங்களை மறந்துவிட்டேன், ஆனால், அவருடனிருந்த நான், கல்லூரிக்கு வெளியே இருந்தும், கல்லூரியை விட்டு நான் நீங்கிய பிறகும் பெற்ற பாடங்களை மறக்கவில்லை—மறக்கவும்மாட்டேன். பொல்லாங்கு எண்ணுவோரைக்காணும் போதும் புன்னகை செய்-கடமையைச் செய்யக்கலங்காதே—காலத்தை அறிந்து உதவிசெய்—தமிழரிடம் பற்று கொள்—அவர்களுக்காகப் பாடுபடுவதைப்பெரியதோர் பண்பு எனக்கொள்-பார்ப்பனரிடையே உள்ள ஒற்றுமையைப்பார், அதுபோல் தமிழரிடை உண்டாக்க வேலை செய்-என்பன போன்ற அரும் பெரும் பாடங்களை எனக்களித்த ஆசிரியரை, நண்பரை, தோழரை, இழந்தேன். தமிழர் ஒரு சிறந்த ஊழியரை இழந்தனர். சென்னை ஓர் சிங்கார புருடரை இழந்தது. பச்சையப்பன் கல்லூரி தனது பரிவுள்ள பரிபாலகரைப் பறிகொடுத்துவிட்டது. தோழர் திருவேங்கிடசாமி மாரடைப்பினால் திடீலென மரணமடைந்தார். தமிழரின் திருவிளக்கொன்று அணைந்துவிட்டது. என் செய்வது.

அவர், பச்சையப்பன் கல்லூரித் தலைவராக நியமிக்கப்பட்டபோது நான் கொண்ட மகிழ்ச்சி சொல்லுந்தரத்த தன்று. அவரது ஆட்சியின்கீழ் எனது கல்லூரி தமிழருக்கு அறிவூட்டும் ஊற்றாக விளங்கும் என்றெண்ணிப் பூரித்தேன். அவருடைய தமிழ்ப்பற்றும், பகுத்தறிவுத்திறனும் கண்டு களித்த நான். அவரது புகழை மாற்றாரும் உரைக்கக்கேட்ட காதுகளில், அவரது மரணச்செய்தியைக் கேட்கும் துர்ப்பாக்கியம் பெறுவேன் என்று எண்ணவில்லை. கண்ணால் கனியைக்காணும் நேரத்திலேயே, கல்லடிபட்டுக் கனி கீழே வீழ்ந்தது போல், அவர் மறைந்தார்.

சென்னைக்கு நீர் ஊற்றாக இருக்கும் மாதவரம் ஏரிக்கரைமீது, பெரியார் தடியை ஊன்றிக்கொண்டு நடக்க, அவர் பக்கத்தில், தோழர் திருவேங்கிடசாமி அவர்கள் நடந்துகொண்டு தமிழருக்குக் கல்வித்துறையில் உள்ள குறைபாடுகள் பற்றி விளக்கிக்கூறிக் கொண்டுவர, அக்காட்சியைக் கண்டும், பேச்சைக் கேட்டும் மகிழ்ந்து நான் நடந்துசென்றதும் பின்னர் அவரது விடுதியில், பெரியாருக்கு விருந்தளிக்கப்பட்டதும், அதுபோது நானும் அவருடனிருந்து உண்டதும், பின்னர், கல்லூரி மாணவர்களின் ராணுவப் பயிற்சிப் படையின் விழாவுக்கு அவர் எம்மை அழைத்துச் சென்றதும், இப்போது தான் நடப்பது போல், என்மனக்கண்முன் தோன்றுகிறது. அதுநான் 'விடுதலை'யை விட்டு விலகிய மறுநாள் நடந்தது. அதற்கு மறுநாள், எனது ஆசிரியர் என்னைத் தமது இல்லத்திற்கு வரவழைத்து, 'விடுதலை'யை விட்டு விலகியது ஏன் என்று விசாரத்துடன் கேட்டு, பற்பல புத்திமதிகள் புகன்ற காட்சி, இதோஎன் எதிரே சித்திரம் போல் நிற்கக் காண்கிறேன்.

ஆனால் அவர் மறைந்துவிட்டார். அவரது மறைவால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுசெய்ய முடியாது என்றுரைப்பது சம்பிரதாயத்தைக் கடந்த பேச்சு.

அவரது குடும்பத்துக்கு என் ஆழ்ந்த அனுதாபத்தை, வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். காலத்தை எண்ணி, மிகக்கலங்குகிறேன். என்நிலை இதுவெனில், அவரதுகுடும்பத்தினரின் நிலைமையாதாயிருக்கும். நினைக்கவும், நெஞ்சு வேகிறது.

தனபாக்கியத்தம்மையார் மறைவு

நினைவுக்கல் நாட்டு விழா — தலைவர்கள் பிரசங்கம்

(நமது நிருபர்)

கும்பகோணம், ஏப் 6

சுயமரியாதை, ஜஸ்டிஸ் இயக்கப் பிரமுகர்களில் ஒருவரான கும்பகோணம் தோழர். கே. கே நீலமேகம் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார். காலஞ்சென்ற தனபாக்கியத்தம்மையாரின் நினைவுக்கல் நாட்டுவிழா இவ்வூர் ஆனைக்காரன் பாளையத்தில் மேற்படியாரின் சமாதி நிலையத்தில் இன்று காலை 9-மணிக்கு மிக விமரிசையாய்க் கொண்டாடப்பட்டது. கூட்டம் பிரம்மாண்டமாய்க் கூடியிருந்தது. திருச்சி தோழர். கே. ஏ. பி. விஸ்வநாதன் அவர்கள் மேற்படி வைபவத்துக்குத் தலைமை வகித்து அம்மையாரின் திரு உருவப் படத்தையும் திறந்துவைத்தார். அதுசமயம் அவர் பேசுகையில், சகோதரி தனபாக்கியம் அம்மாளின் சீரிய நோக்கங்களையும் வாழ்க்கையில் கணவருக்கு அளித்து வந்த மேன்மையான ஊக்கத்தால் பொது வாழ்க்கையில் சிறப்பிக்க நல்ல ஹேதுவாயிருந்த தென்றும், பொறுமையும், நல்ல சீலமும். அடக்கமும் வாய்ந்த அவர்களின் வாழ்க்கையைப் போல் பெண்மணிகள் நடக்கவேண்டு மென்றும் சமாதி வைத்து கல் நாட்டு விழா நடத்துகிற விஷயம் புதிதல்ல வென்றும் இது தான் திராவிடர்களின் பண்டை முறை என்றும் பேசினார்.”

பின்னர் திருவாளர்கள் சாமி சிதம்பரனார். வி. சின்னத்தம்பி ரங்கசாமிபிள்ளை எஸ். ஆர் சாமி, எஸ். சம்பத்தம் (மாயவரம்) பாவலர் பாலசுந்தரம். ஞானதிக்கம் பிள்ளை ஜனாப் ஹாலம்கான். டி. கே சண்முகம், ஆகியவர்கள் முறையே மேற்கண்டவாறு அனுதாபம் தெரிவித்துப் பேசினார்கள். பிறகு திரு. கே. கே. நீலமேகம் அவர்கள் வந்தனோபசாரம் கூறியதுடன் தனக்கு வெளியூர்களிலிருந்தும் இங்கும் தெரிவிக்கப்பட்ட அனுதாபத்துக்கு நன்றியும் தெரிவித்துக் கொண்டார்கள் பிறகு கூட்டம் முடிவுற்றது ஏழைகளுக்குக் கஞ்சி வார்க்கப்பட்டது.

டாக்டர் எங்கே? [2-ம் பக்கத் தொடர்ச்சி]

உயிர்தப்பினால்போதும் என்று பதைக்கிறார்களே, அந்த பரிதாபத்தை நோக்குங்கள்! இதற்குள் இங்கு இவ்வளவு இருக்கிறதே, லண்டன் இரண்டாண்டுகளுக்கு மேலாக ஜெர்மன் குண்டுவீச்சுக்காளாகி வருகிறதே அது போன்ற கொடுமை நேரிட்டால், எத்தனை நிமிடம் நமதுநாடு நிலைத்திருக்கும் என்பதை நினைத்துப்பாருங்கள்

பிரிட்டிஷாரின் விமானபலம், கடற்பலம், தரைப் படை ஆகியவற்றைப்பற்றி ஏளனம்செய்யும் ஏமாளிகளே! பிரிட்டிஷ் படைகள் சாமர்த்தியமாகப் பின் வாங்கின என்று படித்துவிட்டுக் கேலிசெய்யும் குறும்பர்களே! பிரதேசங்கள் பிரிட்டிஷ்பிடியிலிருந்து போனதெனப் படித்ததும், "போச்சா! போய்விட்டதா!" என்று கைகொட்டும் கபோதிகளே! உலகிலேயே பெரிய சாம்ராஜ்யமாயும், ஒரு நூற்றாண்டுக்கு மேலாகவே தனது வல்லமையைப் பிறநாடுகள் மதித்து வரும்படியும் செய்து வாழ்ந்துவரும் ஒரு பிரிட்டனுக்கே, இன்று படைபலம் சரியாக இல்லை என்று கூறவேண்டியும், எதிரியிடம் தோற்கிறது என்று சொல்லவேண்டியும் இருக்கிறதென்றால், ஓட்டைத் துப்பாக்கிக்கும் ஒடிந்துபோன பீரங்கிக்கும் பிளாசியிலே தோற்ற நாட்டவரான நாம், புராணப்புளுகர்கள் கூறும் அஸ்திரங்கள் தவிர வேறென்றறியோம் பராபரமே என்றிருக்கும் நாம், படையைக்கண்டாலே பதைக்கும் நாம், உயரமான சீக்கியன், பலாட்டியனை பஞ்சாபி, பட்டாளத்துத்துரை ஆகியோரைக் கண்டாலே, கதவைத்தாளிடும் நாம், தனியே இன்றோ, நாளையோ, நேற்றோ, இருப்பின், பிரிட்டிஷாரையே திணறடிக்கும் ஜப்பானோ, ஜெர்மனியோ, நம்மை, எவ்வளவு, எளிதிலே நமதுநாட்டை அடித்துத் தள்ளிவிட்டிருக்குமென்பதை எண்ணிப்பாருங்கள்! அம்மியும் குழவியும் ஆகாயத்திலே பறக்கும்போது, அடியேன் கதி என்னாகும் என்று எச்சில் இலைகூவாது, ஆனால், அறிவுள்ளவர்கள் அதனை அறிந்துகொள்ளவேண்டும்.

குண்டுகள் சரியாக விழாதமுன்பே கடலோரத்தில் மட்டுமல்ல, கிராமங்களில்கூட, பதைபதைப்பு உண்டாகும் இந்நாட்டுக்காரராகிய நாம் பிரிட்டனின் சங்கடம் பற்றியோ அதன்படை பலக்குறைவு பற்றியோ கேலிசெய்வது வெறுங்கோமாளித்தனமாகும். இத்தகைய குறும்புகளை விட்டு விடுங்கள்—என்ற இவைகளையும், இவைபோன்றவைகளையும் எடுத்துரைக்கவும், புதிதாக வருவோரை ஆதரிக்கவும், ஊர்காப்புச் சங்கம் வேலைசெய்யவேண்டும்! ஒவ்வோர் ஊரிலும் உள்ளன இத்தகைய சங்கங்கள்! நமது ஊர்ச்சங்கம் என்ன செய்தது என்று அந்தந்த ஊர்மக்களும் விசாரிக்க வேண்டும். எங்கள் ஊரில் என்ன நடக்கிறது என்று கேட்காதீர்கள்! வெளியே சொன்னால் வெட்கக்கேடு! நான்தான் கேட்கிறேனே, **எங்கே டாக்டர்?**



Rangoon Eveready Electric Diamonds.

ரங்கூன் எவரெடி எலெக்ட்ரிக் வைரங்கள்.

பர்மாவில் தேர்ச்சிபெற்ற சிறந்த வைரத்தொழிலாளரைக்கொண்டு முதல்தரமான செயற்கை ரங்கூன் கமலங்கள் தயார் செய்கிறோம். தயவு செய்து ஒருதடவை தங்கள் ஆர்டரை அனுப்புங்கள்.

Sole Agent,
S. RAMASAMY,
Rangoon Electric
Eveready Diamonds.
Thiruvanaikoil P. O.
TRICHINOPOLY.

சோல் ஏஜண்ட்,
S. இராமசாமி
ரங்கூன் எவரெடி
எலெக்ட்ரிக் வைரங்கள்.
திருவானைக்காவல் P. O,
திருச்சினப்பள்ளி.

சுவாமிவேதாசலம் (மறைமலை அடிகள்) **எழுதியது**

குடற்கிளை நோய்க்கு (To Appendicitis)

அறுவை [ஆப்ரேஷன்] இல்லாத

அதிசய வைத்யம்.

திருத்தமான அரிய தமிழ் மருத்துவமுறைத்திறமும் பண்டிதர் எஸ். எஸ் ஆனந்தம் அவர்களின் திறமையைப்பற்றி மனமுவந்து கூறுகின்றேன். 1921-ம ஆண்டு ஆவணித் திங்களில். எனது அடிவயிற்றினுள்ளே மிகக்கொடியதோர் இடரான கழலைகண்டு அதனால் தொடர்பாக உண்டான காய்ச்சலோடு அல்லும் பகலும் வருந்திய படியாய் ஏறக்குறைய ஒரு திங்கள் வரையில் படுக்கையிற்கிடந்தேன். அப்போது என்னைவந்து பார்த்த மருத்துவர்களெல்லாரும் எனக்கு அதனைத் தீர்க்க மாட்டாமல் மயங்கி நிற்ப, பண்டிதர் ஆனந்தம் அவர்கள் உற்ற நேரத்தில் என்பால்வந்து என்னைக் கூற்றுவன் வாயினின்றும் மீட்டார்கள். தூய தமிழ் சித்த மருந்துகளின் வாயிலாகவே மூன்று நாட்களில் அவர் எனக்கு அந்நோயைத் தீர்த்ததானது மிகவும் வியக்கத்தக்கதாயிருந்தது.

அறுத்துத் தீர்க்கும் இஞ்ஞான்றை மருத்துவத்தின் துன்பமான முறைக்கு யான் உள்ளாகாதபடி நோய்தீரப்பெற்றமைக்காக யான் இறைவனை வழுத்துகின்றேன். பின்னர் எனது உடம்பின் வலிவு குறைவாயிருந்தமைக்கு ஆனந்தரின் அரச அமுத சுரபி என்னும் இலேகியம் உட்கொண்டமையால். நல்ல வலிமைவய்தப் பெற்றுப் பெரிதும் நன்மையுற்றேன்.

ஓம்.
சுவாமி வேதாசலம்,
(மறைமலை அடிகள்) பல்லாவரம்.

தற்கால விலாசம்,
பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்,
ஆலோசனை இடம்,
148, நடுத்தெரு சேக்குப்பேட்டை காஞ்சிபுரம்.

கலப்பு மணம்.

திருவத்திபுரம் நீதிக்கட்சி பிரமுகரும், பாங்கரும், வியாபாரியுமான உயர்திரு. கந்தசாமி முதலியார் அவர்கட்கும் உயர்திருவாட்டி வேதவல்லி அம்மைக்கும் இன்று இந்நகர் ரிவின்யூ டிவிஷனல் காரியாலய குமாஸ்தா முருகேச முதலியார், ஆம்பூர் மின்சார விளக்கு நிபுணர் எஸ். ஜெயவேலு ஆவணக்களறி ஜி. எஸ். நாயுடு, ஆசிரியர் பாலசுப்ரமண்யம், காரியதரிசி ஜி. எஸ். சடையாண்டி இன்னும் பலர் முன் இனிதே வாழ்க்கை ஒப்பந்தம் செய்யப்பட்டது. தம்பதிகள் பல்லோரால் ஆசிகூறப்பட்டு தேநீர் விருந்துண்டு அன்று மாலை வாழ்த்துப்பா பாடியபின் நீங்கினர்.

Printed at the United Printing Works, Hodgsonpet Conjeeveram.
and Published by C. N. Annadurai, M A at 51 Nimanthakara Street, L. Conjeeveram.